

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

சித்திரை - வைகாசி

மே - 2020

மலர் 9 இதழ் 5

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| தமிழ் பாகவதம் | 15 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 17 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 24 | 20 |
| பெண்களின் பாண்டித்யம் அக்கால-இக்கால மாறுபாடு | 22 |
| காளிதாஸரின் ஸ்தோத்ரங்கள் | 25 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 27 |
| சதாசிரபிரம்மேந்திரர் | 30 |
| மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 32 |
| புராணக்கதை | 34 |
| ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி | 35 |
| வேதாந்த ஸாரம் | 37 |
| மகாபாரத சுருக்கம் | 39 |
| அத்வைத வினா - விடை | 41 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 43 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## கரோனா தந்த ஆசாரம்

கைகால்களை நன்றாகக் கழுவவும், ஒருவரையும் தொட வேண்டாம், சோப்பு போட்டு கை கழுவவும், ஒரு மீட்டர் தள்ளி நின்று பேசவும், தும்மல், இருமல், வந்தால் கைகுட்டை வைத்து தும்மவும், இருமவும், சமூக விலக்கம் தேவை. ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொண்டு இருக்க வேண்டாம்.

இப்படி பல உபதேசங்களை தினமும் மருத்துவர்கள் மூலம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கொரோனா என்னும் உயிர்க்கொல்லி வைரஸ் உலகையே தன் காலில் மண்டியிடச் செய்துள்ளது. இத்தனை வருடங்களாக மனிதன் போட்ட ஆட்டம், அவனுடைய ஆணவம், பணத்திமிர் அத்தனையும் வீழ்ந்தன.

எந்தெந்த ஆசாரங்களை நமது சாஸ்த்ரங்கள் கூறினவோ, எவைகளை மேல் நாட்டு மோகத்தில் மறந்தோமோ, மறந்து கொண்டிருக்கிறோமோ, குழந்தைகளுக்குக் கற்பிக்காமல் விட்டோமோ அவைகளே மீண்டும் விஸ்வரூபமெடுத்து வந்துள்ளன என்றால் மிகையாகாது.

இக்கட்டுரையின் நோக்கம் வேறு ஒன்று உள்ளது எனினும் நமது தர்ம சாஸ்த்ரங்களும் ஆயுர்வேதமும் என்ன சொல்கின்றன என்பதைப் பார்ப்போம். வைகறையில் துயில் எழு மலமூத்ர விஸர்ஜனத்துக்குப் பின் மூன்று முறை வாய்க் கொப்பளி, கை கால்களை நன்றாகக் கழுவு இறை வணக்கம் செய்.

வெளியில் சென்று வந்தவுடன் கைகால்களை அலம்பு, வேளையில் உணவு உட்கொள், உணவை இகழாதே, உணவைப்போற்று, உணவை எறியாதே, உண்ணும்போது பேசிக் கொண்டோ பராக் பார்த்துக் கொண்டோ, உண்ணாதே, கால்கள் உலரும்முன்னே உணவை சாப்பிடு, உலர்ந்த கால்களுடன் படுக்கப் போ, யாரிடம் பேசும் போதும் தள்ளி நின்று பேசு, எச்சை தெரிக்க பேசாதே, வாயைப் பொத்திக் கொண்டு பேசு, ஒருவரை வணங்கும்போது அஞ்சலி பந்தமாக வணங்கு.

எப்பேர்பட்ட இடரிலும் மனம் தளராதே, எல்லா ப்ராணிகளிடத்திலும் அன்பு செய். சத்யம், தர்மம், பரோபகாரம் இவைகளிலிருந்து எப்போதும் விலகாதே. உனக்கு எது தீமையோ அதை மற்றவர்களுக்குச் செய்யாதே இப்படி பல. அடுக்கிகொண்டே போகலாம். நாம் சொல்லவந்த விஷயம் என்னவென்று பார்ப்போம். இதைப்

படிப்பவர்கள் அட ஆமாம் நம்ம சாஸ்த்ரம் சொல்லாததா என்பர். என் நண்பர்'' சார் எல்லாரும் ப்ராம்மணர்களாயிட்டா'' என்றார். உண்மையில் பெருவாரியான அந்தணர்கள் இவை எதையும் கடைபிடிப்பதில்லை என்பதுதான் விசனிக்கத் தகுந்தது.

இதில் முக்யமான விஷயம் நமது சாஸ்த்ரங்கள் விஞ்யான பார்வை உடையனவா? இதில் இரண்டு கோணங்கள் உள்ளன. ஒன்று நமது சாஸ்த்ரங்கள் அறிவியல் மயமானவையே. இரண்டு அறிவியலுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. நாம் இரண்டையும் விளக்குவோம் சாஸ்த்ரங்கள் சொல்வதும் விஞ்யானம் சொல்வதும் ஒன்றே. ஆனாலும் லக்ஷியம் வேறு. விஞ்யானம் நுண்கிருமிகளிடமிருந்து பாதுகாக்க அவைகளை கடைபிடிக்கச் சொல்லும் சாஸ்த்ரங்கள் மறுமையிலும் புண்யம் சம்பாதிக்க கடைபிடிக்கச் சொல்லும்.

சாஸ்த்ரங்கள் சொல்லும் ஆசாரங்கள் அனைத்துக்கும் scientific explanation கூறமுடியாது. அதனாலேயே அவைகளை விடல் தகாது. இதுபற்றி நமது ஆசார்யர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

''ஸமீபகாலமாக நம் சாஸ்த்ர விஷயங்களில் பல சயின்சுக்கு ஒத்து வருகின்றன என்று கண்டுகொண்டதில் படிப்பாளிகள் கொஞ்சம் அதனிடம் கௌரவ புத்தி காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் நான் என்ன சொல்கிறேனென்றால் இந்த வரைக்கும் சந்தோஷம்தான் என்றாலும் நம் ஆசார அனுஷ்டானங்கள் அனைத்தையும் சயின்ஸின் எல்லைக்குள் கொண்டுவந்து அந்த அடிப்படையில் நிரூபிக்க வேண்டும் என்று நினைப்பது ஸரியில்லை. ஆசாரத்தின் ஸத்யம் அதன் சொந்த ப்ரமாணத்தில் உள்ளது. இது ஸூபர் ஸயின்ஸ். இதுவே எல்லாவற்றிற்கும் ஆதாரம்.'' வாசகர்களுக்குப் இப்போது புரிந்திருக்கும் கட்டுரையின் நோக்கம். எனவே இந்த கரோனா குடும்ப ஒற்றுமையையும், ஆசார அனுஷ்டானத்தையும் மக்கள் அனைவருக்கும் தந்திருக்கிறது.

''A blessing in disguise'' என்று சொல்லுவது போல் மறைமுகமாக நன்மை செய்துள்ளது இந்த கொடும் வ்யாதி. இன்னொரு விஷயம் பார்க்கலாம். ஒருவர் நம்பிக்கையின் பேரில் ஆசார அனுஷ்டானங்களை மேற்கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு இரண்டு நன்மைகள். ஒன்று ஆசார அனுஷ்டானத்தால் இம்மைக்கும், மறுமைக்கும் புண்யம். இரண்டு சயின்ஸ் சொல்படி நிரூபணம். இப்படி இல்லாதவர்கள் பாடுதான் கஷ்டம். எனவே சாஸ்த்ரம் சொல்லும் ஆசாரங்களை நம்மால் முடிந்த வரையில் அனுஷ்டித்தல் நலம். லாக்டவுன் முடிந்தவுடன் மீண்டும் அனாசாரத்தின் வழி போகாமல் இந்த ஆசாரங்களை நித்யமாய் எல்லோரும் கடைபிடித்தல் அவஸ்யம் என்று கூறிகொண்டு நம்மிடையே ஆசாரசீலராக விளங்கும் ஸ்ரீசரணர்கள் பொற்பாதத்தில் இவ்விதழை ஸமர்ப்பிக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

åm£w ì ÷uõzµ®



அதிலே ஸாக்ஷாத் ஜகத் பரிபாலகனான மஹா விஷ்ணுவைப் பற்றி ரொம்பவும் உயர்ந்த கருத்துக்களும், மனஸை உருக்கும் பாவமும், வாய்க்கு அம்ருதமாக இருக்கிற வாக்கும் கொண்டதான "ஷட்பதீ ஸ்தோத்ரம்" என்பது ஒன்று. சின்ன ஸ்தோத்ரம் தான். அதை நன்றாக மனஸில் வாங்கிக் கொண்டு விட்டால் நாம் ஆசார்யாளையும் தெரிந்து கொண்டு விடலாம்; மஹாவிஷ்ணுவையும் தெரிந்து கொண்டு விடலாம்; நம்மையும் தெரிந்து கொண்டு விடலாம். நம்மைத் தெரிந்து கொள்கிறபடி தெரிந்து கொள்வதுதான் அத்வைதம். அந்த உச்சாணி வரைக்கும் இந்த ஷட்பதீ நம்மை அழைத்துக் கொண்டு போய்விடும்.

### பதம் : செய்யுட் பகுதி

"ஷட் - பதீ" என்றால் ஆறுகால் கொண்டது என்று அர்த்தம். "ஷட்" - ஆறு; "பதம்" -கால்.

அதென்ன, ஆறு கால் ஸ்தோத்ரம்?

"பதம்" என்றால் "கால்" என்பதோடு வார்த்தை என்றும் அர்த்தம். ச்லோகத்தில் நாலில் ஒரு பகுதிக்கும் பதம், பாதம் என்று பெயர். மனித சரீரத்தில் நாலில் ஒரு பாகமாக, அதாவது கால்பகுதியாக இருப்பதே கால் என்ற அவயவம். இதே போல, கால் என்ற பொருளைத் தரும் பதம், பாதம் என்பவை ச்லோகத்திலும் நாலில் ஒரு பாகத்தைக் குறிக்கிறது.

இப்படி ஒரு ஒழுங்கும்படி நாலாகப் பிரிகின்ற "பதங்களைக் கொண்டது" ச்லோகம் என்பதாலேயே "பொயட்ரிக்கு" "பத்யம்" என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. "பதம்" என்றால் "வார்த்தை" என்று மட்டும் அர்த்தம் செய்து கொள்வதானால் "ப்ரோஸூம்"

பதங்களாலான பத்யம் தானே? ஆனால் அதற்கு அப்படி (''பத்யம்'' என்று) பெயரில்லாமல் ''கத்யம்'' என்றே பெயர் கொடுத்திருக்கிறது. ''கத்'' என்றால் பேசுவது. அதனால் பேச்சு, நடை, வசன நடை, இயல் என்று சொல்லும் ப்ரோஸை கத்யம் என்பது. இசை என்னும் கவிதைக்குத்தான் சீரான பகுதி பகுதியாகப் பிரித்த பதங்கள் இருப்பதால், அதாவது அது நாலு கால் பகுதிகளாலேயே ஆனதாக இருப்பதால்தான், ''பதம்'' என்றால் கால் பகுதி என்ற பொருளையொட்டி அது பத்யம் எனப்படுகிறது. பாட்டும் கவிதா ரூபமானதால்தான் கல்யாணப் பாட்டு முதலானவற்றை ''பத்தியம்'' என்று தமிழில் சொல்வது pattiyam என்கிறார்கள். அது தப்பு. ஸரியான வடிவம் padyam என்பது. Gadyam - இயல், padyam- இசை.

நோயாளி இன்னதான் சாப்பிடலாம் என்று நிர்ணயிக்கிற ''பத்தியம்'' வேறே. ப்ரசவித்தால் ''பத்தியம்'' போடுவது என்று அதைத்தான் சொல்வது. அது pathyam Padam என்றால் கால்; அதை வைத்துப் பொயட்ரி என்பது padyam Patham என்றால் வழிமுறை. அதனால் சாப்பாட்டை ஒரு முறையிலே வழிபடுத்தி நிர்ணயிப்பது pathyam.

பதம் என்பது ச்லோகத்தின் காற்பகுதி. உதாரணம் சொல்கிறேன் : ஸாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த (அல்லது தெரிந்ததாக நான் நினைத்துக் கொண்டிருக்கிற) ''சுக்லாம்பரதரம்'' ச்லோகத்தை எடுத்துக் கொள்வோம். அது அநுஷ்டுப் சந்தஸில் (சந்தத்தில்) அமைந்தது. அதாவது மொத்தம் முப்பத்திரண்டு எழுத்துக்கள் இருக்கும். இது நாலு எட்டெழுத்துக்களாக – அதாவது நாலு மாதங்களாகப் பிரிந்திருக்கும்.

தமிழ் எழுத்திலே எழுதி எண்ணினால் முப்பத்திரண்டுக்கு மேல் இருக்கும். ஏன் என்றால் ''சுக்லாம்'' என்கிறபோது ''க்லாம்'' என்பதே தமிழில் மூன்று எழுத்தாகிவிடும். ஆனால் கூட்டெழுத்து இருக்கிற ஸ்ம்ஸ்க்ருதத்தில் ''க்லாம்'' ஒரே எழுத்துத்தான். அதனால் எழுத்து ரீதியில் லபியை பார்த்துக் கணக்குப் பண்ணாமல் எத்தனை vowel soundகள் (உயிரெழுத்து ஒலிகள்) இருக்கின்றன என்று கணக்குப் பண்ணினால்தான் ஸரியாக வரும். அப்படி கணக்குப் போட்டால் ''க்லாம்'' என்பதில் ''ஆ'' என்ற ஒரே ஓர் உயிரெழுத்தும், அதோடு க், ல், ம் என்ற மெய்யெழுத்துக்களும் சேர்வதாக ஆகும். அதாவது ''க்லாம்'' என்பது ஒரே அக்ஷரம் என்று ஆகும். இப்படியே தான் பின்னாடி ''விஷ்ணும்'' என்கிற போது ''ஷ்ணும்'' என்று தமிழில் மூன்று எழுத்தால் எழுதினாலும், அதில் ''உ'' என்ற ஒரே உயிரெழுத்துக்கு முன்னும் பின்னுமாக ஷ், ண், ம் என்ற மெய்யெழுத்துக்கள் சேர்வதாக ஏற்படுவதால் ''ஷ்ணும்'' என்பது ஒரே அக்ஷரம் தான்.

# E° ¸®ö©´ ²®E°ºö©´ ²®

உயிரெழுத்து, மெய்யெழுத்து என்று சொல்கிறபோது சைவ ஸித்தாந்திகள் சொல்கிற ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது.

வைஷ்ணவர்கள் ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் சரீர – சரீரி என்று சொல்கிற மாதிரியே (சைவ) ஸித்தாந்திகளும் சொல்வதுண்டு. அதாவது நம் சரீரத்துக்குள் உயிர் என்று ஒன்று இருக்கிறது; அது போய்விட்டால் இந்த சரீரம் அடியோடு ப்ரயோஜனம் இல்லாததாகி விடுகிறது. இதே மாதிரி ஸகல ஜீவாத்மாக்களும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரம்; அதற்குள் உயிராக இருப்பவனே பரமாத்மா; உயிருக்கு உயிராக என்பது போல்; இத்தனை உயிர்களுக்கும் உயிராக, பேருயிராக இருப்பவனே பரமாத்மா என்பதுதான் சரீர – சரீரி தத்வம்.

நசமக்குத் தெரிவது சரீரம் தான். உயிர் தெரியவில்லை. அதனால் தான் சரீரத்துக்கே "மெய்" என்று பேர் வைத்தார்கள். ஆனாலும் தமக்குத் தெரியாமல் இருக்கிற உயிர் போய்விட்டதானால், அப்புறம் இந்த "மெய்" ஒன்றுக்கும் ப்ரயோஜனமில்லாத பொய்யாகி விடுகிறது. "மெய்யும்" "பொய்யானபின்" என்றுகூடப் பாடுகிறார்கள். இப்படித்தான் ஜீவலோகமும் உள்ளே அந்தர்யாமியாக இருக்கிற பேருயிரான பகவான் இல்லாவிட்டால் பொய்யாகப் போய் விடுகிறது.

"பொய்" என்று சொன்னாலும், அத்வைதத்தில் ஆசார்யாள் பரம ஸத்யமான ஒன்றை (ப்ரஹ்மத்தை)த் தவிர இன்னொன்று இருப்பதே பொய், அது வெறும் மாயத் தோற்றம்தான் என்று சொல்கிற ரீதியில் (சைவ) ஸித்தாந்திகள் சொல்லவில்லை. ஈச்வரன் உள்ளே புகுந்து இயக்குகிற இந்த ஜீவ ப்ரபஞ்சத்துக்கும் ஒரு ஸத்யத்வத்தை அவர்கள் சொல்வார்கள். இதற்குத்தான் இந்த உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்வார்கள். மெய்யெழுத்து என்பது க், ங், ச், ஞ் முதலானவை. உயிரெழுத்துக்கள் தான் அ, ஆ, இ, ஈ வரிசை. இரண்டு சேர்ந்த க-கா, கி-கீ, ங-ஙா-ஙி-ஙீ, ச-சா-சி-சீ, ஞ-ஞா-ஞி-ஞீ மாதிரியானவை தான் உயிர்மெய் என்பவை. இங்கே மெய்யெழுத்து வேறே, உயிரெழுத்து வேறே என்று பிரித்திருப்பதாலேயே, "மெய்" என்று சொல்லப்பட்டாலும் அந்த ஒளிகளுக்குத் தனியாக உயிர் இல்லை என்று ஆகிவிட்டது. சரீரத்துக்கு மெய் என்று பெயர் வைத்தாலும் உயிரில்லாவிட்டால் அது எதற்கும் உதவாத மாதிரிதான் மெய்யெழுத்தும் க், ங், ச், ஞ் முதலான ஒலிகளைத் தனிப்பட உச்சரிக்கவே முடியாது. இக், இங், இச், இஞ், என்று

முதலில் சின்னதான ஒரு "இ" சப்தம் சேர்த்தால் தான் இந்த ஒலிகளே வெளியில் வரும், அல்லது பின்னாடி அ, ஆ முதலான உயிரெழுத்துக்களைக் கூட்டி, க, கா என்ற மாதிரி ஒலியை வெளிப்படுத்த முடிகிறது. உயிரெழுத்து இல்லாமல் இவை ப்ரயோஜனமில்லை. ஆனால் அதற்காக இந்த மெய்யெழுத்துக்கள் (Consonants) அடியோடு இல்லை, ஒரே பொய் என்று சொல்லலாமா? உயிரெழுத்து (vowel) சேர்ந்தால் இவை க, ங, ச, ஞ என்று வேறு வேறு ரூபத்தை, ஒலியைப் பெறத் தானே செய்கின்றன? அப்போது எல்லாம் ஒரே சப்தமாக இல்லையே! அதனால் இந்த மெய்யெழுத்துக்களுக்கும், உயிரெழுத்தில்லாமலே தனித் தனியாக ஒரு ரூபம் இருக்க வேண்டும். அதனால் ஒரு ஸத்யத்வம் இருக்க வேண்டும் என்றுதானே அர்த்தம்? எனவே மெய்யெழுத்துக்கள் தாமாகவே கொஞ்சம் மெய்மாதிரி இருப்பவைதான். இதே ரீதியில் ஜீவர்களும் வேறு வேறாக இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கும் மெய்யெழுத்துக்கு இருக்கிற மாதிரி கொஞ்சம் தனியான ஸத்யத்வம் இருக்கத்தான் வேண்டும். ஒரே பொய் என்று தள்ளிவிட முடியாது. ஆனாலும் உயிர் பொய் என்று தள்ளிவிட முடியாது. ஆனாலும் உயிர் ஒரே போய்விட்டால் எல்லாரும் ஒரே மாதிரி சவமாகி விடுகிற மாதிரி, "சீவ ப்ரபஞ்சமும் சிவம் என்ற பேருயிர் இல்லாவிட்டால் எல்லோரும் ஒரே மாதிரி சவமாகி விடுகிற மாதிரி, சீவ ப்ரபஞ்சமும் சிவம் என்ற பேருயிர் இல்லாவிட்டால் சவம்தான்" என்றிப்படி (சைவ) ஸித்தாந்திகள் சொல்வார்கள். அத்வைதமாக எல்லாம் ஒரே ஆத்மா என்று சொல்லாமல் கொஞ்சம் பிரித்து த்வைதமாக இருப்பதற்கு இப்படி த்ருஷ்டாந்தம் காட்டுகிறார்கள். ஜீவாத்மா மெய்யெழுத்து, பரமாத்மா உயிரெழுத்து மாதிரி என்கிறார்கள்.

வாஸ்தவத்தில் ஸ்ரீ சங்கரபகவத் பாதரும் லோகம் - ஜீவன் முழுப்பொய் என்று சொல்லவில்லை. ஸத்யத்திலேயே அவர் பலநிலைகளை (லெவல்களை) சொல்லியிருக்கிறார். ஆனால் இங்கே நான் தத்வச் சண்டை போட வரவில்லை. ஆசார்யாளே இந்த வாதம், சண்டை எல்லாம் வேண்டாம். பக்திதான் வேண்டும் என்று நமக்குச் கற்றுக் கொடுக்க வந்த ஷட்பதீ ஸ்தோத்ரத்தைத்தான் சொல்ல ஆரம்பித்தேன். ஆறுகால் என்பதை விளக்க ஆரம்பித்த போது ச்லோகத்தின் பாதங்களைப் பற்றிப் பேச்சுவந்து, அது அக்ஷரக் கணக்கில் கொண்டுபோய், ஸித்தாத்தங்களில் இழுத்துவிட்டது.

மறுபடியும் 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொண்டு ஆரம்பிக்கலாம்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## சம்பத்திலும் விபத்திலும்



***செழிப்புடன் வாழும் போது உற்றாரும் உறவினரும், நண்பரும் கலகலவென்று கூடி நிற்பர். நொடித்த நிலையில் அடையாளமே கண்டு கொள்ள மாட்டார்கள். அப்போதும் உதவக் கூட இருப்பவனே சுற்நத்தான். அவனே நண்பன். அவனுக்காகத் தெய்வமே கை கொடுக்கும்.***

காட்டில் ஓர் அடர்ந்த மரம். அதன் நிழலில் பறவையும், மிருகங்களும் கூடி வாழ்ந்தன. மனிதர்களும் அவ்வப்போது அங்கே இளைப்பாற வருவார்கள். ஒரு வேடன் வேட்டையாட வந்தவன் அந்த மரத்தினடியில் கொழுத்த மான்கள் நிற்பதைக் கண்டான். வில்லில் அம்பைப் பூட்டி அடித்தான். அம்பின் நுனியில் விஷம் தோய்த்திருந்தான். அதனால் அடிபட்ட பிராணி உடன் மயங்கி அங்கேயே விழுந்து விடும். அவன் துரத்திச் செல்ல அவசியமிராது. அன்று வேடன் எய்த அம்புகளுக்கு ஒரு மான் கூட இரையாகவில்லை. மான்களுக்குச் செவியுணர்வு அதிகம். நாணேற்றி அம்பு எய்யும்போது ஏற்படுகின்ற சிறு ஒலியைக் கூட அவை கேட்டு உடன் எழும்பிக் குதித்து ஓடிவிடும். மான்கள் ஓடிவிட்டன. வேடன் எய்த அம்புகள் மரத்தில் தைத்தன. வேடன் தன் முயற்சி வீணானதைக் கண்டு மரத்தில் பதிந்த அம்புகளைப் பிடுங்கிச் சென்றான்.

அம்பின் நுனியிலிருந்த விஷம் மரத்தைத் தீண்டியது. மரம் கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்தது. இலைகள் உதிரத் தொடங்கின. இன்று அதன் கீழே நிழலில்லை. மனிதன் அதை ஒதுக்கினான். பட்சிகளும், மிருகங்களும் வாழத் தகுதியற்றதென ஒதுக்கின. அது தனி மரமாக நின்றது அதன்

பொந்தில் ஒரு கிளி வெகு நாட்களாக வாழ்ந்து வந்தது. அது அங்கேதான் பிறந்தது. அதன் கனிகளால் அது வளர்ந்தது. அதன் நிழலில் சுகமாகப் பொழுதைக் கழித்தது. அந்த மரத்திடம் அதற்கு ஒரு தனி பிரியம். இன்று அது காய்ந்து சுள்ளியாக நிற்கும் நிலையிலும் அதனை விட்டகலவில்லை. உணவைத் தேடி வெளியே செல்லவில்லை. அதுவும் மரத்துடன் காய்ந்தது. அதன் இனத்தினர் பலர் அந்த மரத்தை விட்டுவர நிர்பந்தித்த போதும் வர மறுத்தது.

ஒரு முனிவர் அங்கு வந்தார். தனித்து வாழ்கின்ற அந்தக் கிளியைக் கண்டார். "கிளியே! இந்த மரம் பட்டுப் போய் விட்டது. இதனடியில் நிழல் இல்லை. உணவிற்குக் கனியில்லை. உறவாட உன் இனத்தவர் இல்லை. அருகில் வேறொரு நிழல்தரும் மரம் உள்ளது. நிறையக் கனிகள் உள்ளன. உன் இனத்தவர் பலர் அங்கு உள்ளனர். ஏன் வீணே உன்னைச் சாகடித்துக் கொள்கிறாய்?" எனக் கேட்டார். கிளி சொல்லிற்று. "முனிவரே! நிற்க நிழலும், உடுத்த ஆடையும், உண்ண உணவும் கிடைத்தால் மட்டும் போதாது. அன்புடன் அரவணைப்பும், துன்பத்தில் பாதுகாப்பும் தருகின்ற உள்ளத்தின் துணையும் தேவை. இந்த மரம் எனக்கு சுகவாழ்வைத் தந்தது. வெயிலும், மழையும், கடுங்குளிரும் என்னைப் பாதிக்காமல் பாதுகாத்தது. நான் ஓய்வு பெற்றுத் தன்னை மறந்து தூங்குகையில் எதிரிகள் என்னை அழிக்காமல் கவசம் போல் பாதுகாத்தது அதனிடமிருந்த கனிகளை நான் சாப்பிட விரும்பும்போது என்றும் என்னை அது தடுத்ததில்லை. எனக்கு தரக்கூடாதென்று மறைத்து வைத்ததில்லை. அது காய்ந்து சுள்ளியாகும் வரை எனக்கு இத்தனை உதவிகளையும் செய்தது. தான் அழிந்த பின்னும் என்னை இங்கு இருக்கச் செய்துள்ளது. இத்தனை அன்பு செலுத்திய மரத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இது எதனாலும் தீர்க்கமுடியாத கடன். அதன் செழிப்பில் வாழ்ந்த நான் அது வாடி நிற்கும் நிலையில் அதன்கூட இருப்பதும் அது ஆறுதல் பெறக்கூடும். அதற்கு எவ்விதத்திலும் உதவ இயலாத நிலை எனினும் என்னளவில் இந்த ஆறுதலையாவது அளிக்க விரும்புகிறேன். இதனால் பெரிதும் நலம் பெற்ற நான் இத்துடன் மடிவதில் அதிக இன்பத்தையே உணர்கிறேன். இதுதான் என் உற்றார், உறவினர், நண்பரும்கூட. இதன் கூட வாழ்வதே பெருஞ்சுகம் என்றது."

முனிவர் மனம் கசிந்து பேசினார் – "கிளியே! உனது கனிந்த உள்ளத்தில் ஆழ்ந்துள்ள அன்பைப் போற்றுகிறேன். அன்பே வாழ்க்கையின் ஆதாரம். என் தவம் முழுவதையும் பயன்படுத்தி உனக்கு உதவ விரும்புகிறேன். நீ விரும்பியதைச் செய்கிறேன் என்றார்." கிளி சொன்னது –

"பெரியவரே ! எனக்கெனத் தனித்து வேண்டியது எதுவுமில்லை. மழை தெய்வத்தை வேண்டி மழை பெய்யச் செய்யுங்கள். புத்துயிர் சுரக்கின்ற மழை நீர், இந்த மரத்தை மறுபடி தளிர்க்கச் செய்யக் கூடும். இது தளித்தால் என்னைப் போன்ற ஆயிரம் உயிரினம் நலம் பெறும். எனது ஒரே உறவினர், நண்பர் எல்லாமுமான இந்த மரம் புத்துயிர் பெறுவதைக் கண்டு நானும் மகிழ்வேன். என் வாழ்நாளை இதன் நிழலில் கழிப்பேன்" என்றது.

முனிவர் மழைத் தெய்வத்தை வேண்டினார். இறைவனின் அருள் சுரந்தது. மழை பெய்தது. மரம் தளிர்த்தது. ஓர் அன்புள்ளத்தின் உதவியால் நேர்ந்த தன் செழிப்பை தன் நலம் பாராமல் மறுபடி முன் போலப் பிறருக்கு உதவுகின்ற பணியில் பயன்படுத்தியது.

*வியாசருக்கு வேத வியாசர் என்று பெயர். வேதங்கள் நிறைய இருந்திருக்கின்றன. கலியுகம் ஆரம்பிப்பதற்கு முன்னால் துவாபரயுக முடிவில் வியாச பகவான் வேதங்களை நான்காகப் பிரித்தார். இனிவரப் போகிற யுகத்தில் ஜனங்களுடைய வயதும் குறைவு; ஞாபக சக்தியும் குறைவு; ஆசாரம் குறைவு; பெரிய யோக சக்திகள் யாவும் குறைந்து போகும்.*

*ஒரேயடியாக வேதம் அழிந்துபோகாமல் இருக்க ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் எண்ணினார்.*

*ஆகையினால் வேதத்தை ரிக், யஜுர், ஸாம, அதர்வணம் என்று நான்காகப் பிரித்தார். காதினாலே கேட்டு, வாக்கினாலே ஸ்வரத்தோடு அத்தியயனம் பண்ணி லோகத்தில் வேதம் பரம்பரையாக வந்துகொண்டிருக்க வேண்டுமென்று ஒவ்வொரு வேதத்தை ஒவ்வொரு ரிஷிக்கு உபதேசம் செய்தார். ஸுமந்து, பைலர், ஜைமினி, வைசம்பாயனர் என்று நான்கு ரிஷிகளிடத்திலும் நான்கு வேதங்களையும் ஒப்படைத்தார். வைசம்பாயனரிடத்தில் யஜுர் வேதத்தையும், ஸுமந்துவிடம் ரிக் வேதத்தையும், பைலரிடம் அதர்வண வேதத்தையும் ஒப்படைத்தார்.*


*வேதம் முழுவதும் மந்திரங்கள் நிரம்பியிருக்கின்றன. மிகவும் நியாயமாகவும் ஆசாரமாகவும் இருந்து ஜபம் பண்ணிக்கொண்டு வந்தால் அந்த மந்திரங்களின் பிரவிருத்தியினால் உலகத்திற்கு ஒரு சிரேயஸ் ஏற்படும். எந்த எந்தக் காலத்தில் வேதாத்தியயனம் பண்ண வேண்டும் என்று வரையறை இருக்கிறது. புஸ்தகத்தைப் பார்த்துப் படிக்காமல் இருக்கவேண்டும். வேதம் சுருதி: அதைக் காதினால் கேட்டு அப்படியே வாக்கில் தாரணம் பண்ண வேண்டும்.*

*--ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்.*

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஜயந்தி – ஸ்ரீ பெரியவாளின் அனுக்ரஹ பாஷணம்



இன்று வெள்ளிக்கிழமை, காஞ்சி மஹாஸ்வாமிகள் ஜெயந்தி உற்சவம், சாந்தரமானப்படி இன்று பக்தர்கள் ஆங்காங்கே பூஜைகள், பாராயணம் அனைத்தும் குருபக்தியுடன் செய்து வருகிறார்கள். குரு பக்தி, குருகுல வாசம், உபதேசம் நமது பாரத தேசத்திலே மனிதர்கள் நன்றாக வாழ, நல்ல வழியில் செல்ல பூஜைகள், பாராயணம் செய்வது நமது நாட்டிலே பல வருடங்களாக வரும் பாரம்பரியம்.

கிருஷ்ண பரமாத்மா , சாந்தீபனி ஆஷ்ரமம் சென்று குருவிற்கு சேவை செய்து, அனைவருடன் கலந்து படித்து, அவருடன் படித்த குசேலருக்கு, சரியான சமயத்தில் விசேஷ அனுக்ரகம் செய்ததை நாம் பார்க்கிறோம். குரு குல வாசம் செய்தவர்கள் மத்தியில் அனைவருக்கும் புண்ணியம்-க்ரம படிப்பு, சேவை மனப்பான்மை, ஆதரவு எண்ணம்-மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ- உபநிஷத்தில் ஆத்ம குணங்களை விவரித்து, மனிதர்களுக்கு நல்ல குணம் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அந்த மாதிரியான நல்ல குணங்கள், குரு குல வாசத்தில் தொடர்ந்தது. **பாவம், ஸ்வபாவம்** நமக்கு வர வேண்டும். இதை நமது வாழ்க்கையில் இலட்சியமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த நிர்ணயம், குருகுல வாசத்தில் வரும். அங்கிருந்து தொடங்கிய நற்குணம், நமது நாடு முழுவதும் பரவி உள்ளது. நமக்கு பாதை காட்டியது,

வழிகாட்டியது வேதம் சாஸ்திரங்கள்.

இதைப் போன்ற குணங்கள், ஸூக்ஷ்ம தாத்பரியங்கள் அனைத்தையும் சரளமாக, உதாரணத்துடன் வாழ்ந்து நமக்கு வழிகாட்டியவர், சங்கர பகவத்பாதர். அவர் அன்று செய்த அத்வைதப் பிரசாரம், சேவை மனப்பான்மை ஆகிய அனைத்தையும் 1894 முதல், நமது காஞ்சி மஹாஸ்வாமிகள், நடமாடும் தெய்வமாக நமது மத்தியில் இருந்து, உபதேசம் செய்து 27 சாதுர்மாஸ்யம் அனுஷ்டானம் செய்து; சாதுர்மாஸ்ய அனுஷ்டானம் மற்றும் அல்ல. தினமும் அனுஷ்டானம் செய்து, மௌனமாய் இருந்து, உபதேசம் செய்து, சஞ்சாரம் செய்தவர். மக்களுக்கு என்னென்ன உபகாரம் செய்ய முடியும் என்று எப்பொழுதும் சிந்தித்தவர். இந்த அற்புதமான சனாதன தர்மத்தை எப்பொழுதும் உபதேசம் செய்து , வெளிநாட்டிற்கு சென்றவர்களாய் இருந்தாலும் சரி, வெவ்வேறு மதத்தை சேர்ந்தவர்களுக்கும், வேறு நாட்டவற்கும் தர்மத்தைப் பற்றிச் சொல்லி, சாத்வீகமான வழியில், சமுதாயத்தில் இருந்து, ஆன்மீக, தார்மீக சமுதாயத்திற்காக வாழ்ந்தார்கள்.

தினமும் நாம் பூஜைகள் செய்ய வேண்டும். நாம் வேதத்தை பாதுகாக்க வேண்டும். சாஸ்திரங்கள் படிக்க தயார் செய்ய வேண்டும். சாஸ்திரம் பிரசாரத்திற்கு கொண்டு வர வேண்டும். ஆத்மார்த்த பூஜை வீட்டில் செய்து கொள்கிறார்கள். கிராமத்தில் பரமார்த்த பூஜை செய்கிறார்கள். வீட்டில் சிவ பூஜையோ, ஜபமோ, பாராயணமோ செய்ய வேண்டும். சாஸ்திரங்களை அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். கர்ம மார்க்கம் எது என்று ஆலோசனை செய்து, அதிலேயே பக்தி ஸ்ரத்தையுடன் செய்ய வேண்டும் என்று உபன்யாசம் மூலம் சாஸ்திரத்தைப் பற்றி கூறினார். அவர் அனுக்ரகம் மூலம் செய்தது வேறு. சஞ்சாரம் செய்து கூறிய விஷயங்கள் வேறு, அதிகாரிகளுக்கு அளித்த விஷயம் வேறு.

இந்த தேச நிர்வாகம் முக்கியம். சாஸ்திரம் முக்கியம். சம்ஸ்க்ருதம் அனைவரும் படிக்க வேண்டும். மற்றும் திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவற்றையும் படிக்க வேண்டும். ராம நாமம் எழுதுதல், இது மட்டுமன்றி, தேச விதேஷ உறவுகள் சம்பந்தம், பிற தேசங்களினால் நல்லிணக்கம், தேசத்தின் கௌரவத்திற்க்கும், உலக அமைதிக்கும், தர்மத்திற்கும், நித்ய அனுஷ்டானதிற்கும் சாஸ்திரீய முறையில், சாஸ்த்ர முறையில் வழிகாட்டினார். மகாபெரியவா பதிமூன்று வயது முதல் எல்லாவிதமான சந்தர்பத்திலும் நித்ய அனுஷ்டானம், சந்திர மௌலீச்வர பூஜை, காசி யாத்திரை, மற்றும் கர்நாடக, மகாராஷ்டிரா , ஆந்திரா மற்றும் நாடு முழுவதும் பாதயாத்ரையாக சென்று,

மனிதர்களுக்காக, நாட்டிற்காக, உலகிற்காக, உலக நன்மைக்காக ரிஷியாக நடமாடும் தெய்வமாக வழிகாட்டினார். பரோபகாரமாக, வித்யா மூலமாக, உபாசனம் மூலமாக அனைவருக்கும் உபகாரம் செய்தார்-படித்தவர்கள், படிக்காதவர்கள், மனசில் பக்தி **பாவம்**, சேவா **பாவம்**. நாம் அவதாரம் குறித்து புராணத்தில் படிக்கிறோம். ஆதிசங்கரர் அவர்களுக்குப் பின் நாட்டிற்க்கும், மக்களுக்கும், சமுதாயத்திற்கும், உலகத்திற்கும் பணிசெய்தவர் மகாபெரியவா அவர்கள். அதனால், ஆத்மீக விழிப்புணர்வு ஏற்பட்டது. நமது நடமாடும் தெய்வத்திற்கு ஸ்மரணம், தியானம், பூஜை, பாராயணம் செய்து, நமக்கு இன்றைக்கு தேவையான ஆரோக்கியம், ஆஸ்திக சக்தி அனைவருக்கும் குருபக்தி மூலம், திருவருளுடன் கிடைக்கட்டும். சனாதன தர்மத்தில் நிஷ்டை ஞானம் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். மனம் அடங்கிவிட்டால் பின்ன வேறொன்றும் தேவையில்லை. ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை அமைதியாக வைத்துக்கொண்டு புலன்களைக் கண்ட வழியில் சிதறவிடாமல், தியானத்தில் அமர வேண்டும். அப்படித் தியானம் செய்வதால் புத்தியானது தெளிவடையும். ஆசையும் கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒப்பற்ற சாதனம். சித்தம் சுத்தியானால் ஆத்ம ஞானம் உண்டாகும். இவ்விதம் லோகத்தில் ஒவ்வொருவனும் தனது அறிவு வளர்ச்சிக்கும் ஆத்ம முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும்.

--ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்.

## ஸனாதன தர்மப்புதிர்கள்
## ஏப்ரல் விடைகள்


1. ருரு
2. தேவிப்பட்டணம்
3. சௌபா தோஹாக்கள்
4. நூபுர கங்கை
5. வட பத்ர சாயி
6. மகுடாகமம்
7. தஞ்சை பெரிய கோயில்
8. கருவூரார்
9. சட்டீஸ்கர்
10. மைத்ராவருணி

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ப்ரஹ்லாத சரித்திரம்

ஸ்ரீமத் பாகவத சுலோகங்கள் அடிப்படையில்



63. எம்பெருமானின் நருஸிம்ஹ வடிவத்தைப் பார்த்து, ப்ரஹ்லாதாழ்வான் ஹே ! தாமரைக்கண்ணா ! உமக்கு நமஸ்காரம். ஹே புருஷோத்தமா உமக்கு நமஸ்காரம். அகில உலக ஆத்மாவானவனே! உமக்கு நமஸ்காரம். திருவாழியானே! உமக்கு நமஸ்காரம்.

64. ஹே! வாஸுதேவா உமக்கு நமஸ்காரம். ஹே! கருணாகரா! உமக்கு நமஸ்காரம். உலகமே வடிவானவா உமக்கு நமஸ்காரம். எல்லா வணங்கப்படும் தெய்வங்களாய்த் தோற்றுபவனே உமக்கு நமஸ்காரம்.,,,

65. ப்ரஹ்மமாகிய தேவனே ! ஆவினம் அந்தணர் இவர்களுக்கு ஹிதம் (நன்மை) செய்பவனே ! உலகின் நன்மை நாடுபவனே ! ஹே ! கரியவனே ஹே ! கோவிந்தா உமக்கு மீண்டும் நமஸ்காரம்.

66. பகவான் ஹே ! ப்ரஹ்லாதா உன்னுடைய மாறுபடாத, அழியாத, பக்தியினால் நாம் மகிழ்ந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டுமோ வேண்டி பெற்றுக்கொள்.

67. ப்ரஹ்லாதன் அடியேன் எந்த எந்த பிறவிகளிலும் உம்மிடம் இருந்து நழுவா பக்தியை அச்யுதனே அருள வேண்டும்.

68. விவேகம் இல்லாதவர்களுக்கு உலகியல் விஷயங்களில் பற்று உள்ளது போல் எனக்கு உம்மை நினைப்பதிலிருந்து வழுவாமல் இருக்க அருள்வாய்.

69. பகவான் என்னிடம் உனக்கு இருக்கும் பக்தி மீண்டும் இருக்கப் போகிறது. என்னிடம் இருந்து வேறு விரும்பும் வரம் கேளு.

70. எனது தகப்பனார் கெடுதலாக எனக்கு அபராதம் இழைத்ததற்கு புத்ரன் என்ற பாசம்; இழைந்திருக்கிறார்.

71. உன்னுடைய ஏழுதலைமுறை உன் தகப்பனார் அவனது தகப்பனார் என்று ஸாதுவாகிய உன்னை வீட்டில் பிறக்கச் உனது செய்ததால் குலமே புனிதமாக விளங்கும்.

72. எங்கெல்லாம் என்னடியார்கள், அமைதியானவர்கள், ஸமநோக்கு உள்ளவர்களாகிய நல்லவர்கள், நல்லொழுக்க சீலர்கள் இருக்கின்றனரோ அவ்விடம் உள்ள புழுக்கள் கூட புனிதமடையும்.

குறிப்பு :

வைணவ இலக்கணம் அமைதி, ஸமநோக்கு, நல்லவனாய் இருத்தல்,
நல்லொழுக்க சீலராய் இருத்தல் இவை அமையாத ஸ்வரூபம் வீணே!

இது ப்ரஹ்லாத சரித்திரம் காட்டுவது புரிவோம். இதனை வாழ்வோம் வைணவனாய்.

## பாத தாமரை

*''பாத பங்கேருஹ த்வந்த்வம்'': தாமரை போன்ற பாத இரட்டை. 'பங்கேருஹம்' என்றாலும் 'பங்கஜம்' என்றாலும் ஒரே அர்த்தந்தான். பங்கம் என்றால் சேறு. சேற்றில் முளைப்பது பங்கஜம் அல்லது பங்கேருஹம். அழுக்கேயில்லாமல் பரம நிர்மலமாக, அழகாக உள்ள தாமரை அழுக்கான சேற்றில் பிறக்கிறது. எங்கே பிறந்தாலும் உயர்வாக, சிரேஷ்டமாக உருவாகலாம் என்று ஞாபகப்படுத்துவதற்காக அழகான தாமரைக்குச் 'சேற்றில் பிறந்தது' என்று பேர் வைத்திருக்கிறார்கள். நீரில், நீர்நிலையில் பிறப்பதால் நீரஜம், அம்போருஹம், ஸரஸிஜம், குட்டையைக் குழப்பி உண்டான சேற்றில் உண்டாவதால் பங்கேருஹம். குழம்பிக்கிடக்கிற நம் மனஸிலும் மலர்ந்திருப்பது பகவானின் பாத தாமரை.*

*தெய்வத்தின் குரல் (ஐந்தாம் பகுதி)*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 5

பி. ஆர். கண்ணன்

## ஸ்கந்தம் 2



### மகாபாரதம்

*மகாபாரத யுத்தத்தின் இறுதியில் அஸ்வத்தாமா த்ரௌபதியின் ஐந்து புத்திரர்களை நிர்தாக்ஷிண்யமாகக் கொலை செய்துவிட்டு, பின்னர் பாண்டவ வம்சத்தின் ஒரே வாரிசாக, அர்ஜுனன் புத்திரன் அபிமன்யுவின் பத்தினி உத்தராவின் கர்ப்பத்தில் இருந்த சிசுவை பிரம்மாஸ்திரத்தை பிரயோகித்து வதம் செய்ய முற்பட்டான். அப்போது கிருஷ்ணர் தானே உத்தரையின் கர்ப்பத்தில் பிரவேசித்து, சிசுவைக் காப்பாற்றினார். சிசு பிறந்தபிறகு பரீக்ஷித் என்று பெயர் வைத்தனர். பரிக்ஷீணேஷு வம்சேஷு ஜாதோ யஸ்மாத்வரஸ்ஸுதஃ । தஸ்மாத்பரீக்ஷிதோ நாம விக்யாதஃ ப்ருதிவீதலே ।। பாண்டவவம்சம் நிர்மூலமாகுந் தருவாயில் (பரிக்ஷீணம்), பிறந்ததனால் பரீக்ஷித் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தனர். (இதே விஷயத்தை ஸ்ரீமத்பாகவதத்தில் சொல்லும்போது, கருவில் கண்ட கிருஷ்ணரை, குழந்தை தான் பிறந்தபிறகு பார்க்கும் மனுஷ்யர்களோடு ஒப்பிட்டு பரீக்ஷித்துப்பார்த்து, ஒவ்வொருவரையும் இவர் கிருஷ்ணர் இல்லை என்று முடிவெடுத்த காரணத்தினால், பரீக்ஷித் என்று பெயர் என்றார்.)*

*பாண்டவர்கள், விதுரர் மறைந்தபின், திருதராஷ்டிரர் முதலானோரை வனத்தில் பார்த்தபோது, நாரதர், வியாஸர் ஆகியோரும் வந்திருந்தனர். அப்போது குந்தி யுத்தத்தில் மரித்த கர்ணனையும், காந்தாரி கௌரவர்களையும், ஸுபத்ரா அபிமன்யுவையும் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டு, வியாஸரிடம் பிரார்த்தித்தனர். இறந்தவர்களைப் பார்க்க விரும்பிய இந்த விசித்திரமான வேண்டுகோளைக் கேட்ட வியாஸர் திகைத்துப்போய், தேவியிடம் வேண்டினார்:*

'இறந்தவர்கள் விஷயம் உனக்குத்தானே தெரியும். மகாப்பிரளயத்தின்போதும் எல்லா ஜீவராசிகளையும் அவரவர்களுடைய குணங்களுடன் நீ தானே ஸூக்ஷ்மரூபத்தில் வைத்துக் காப்பாற்றுகிறாய். அதனால் இவர்களுடைய ஆசையையும் நீயே பூர்த்தி செய்யவும். நான் சக்தியற்றவன்' என்று. தேவியும், பூமியில் மரித்தபின் ஸ்வர்க்கத்திலிருந்த அவர்கள் எல்லோரையும் அழைத்துக் காண்பித்தாள். குந்தி முதலானவர்கள் பார்த்துத் திருப்தியடைந்தபின், அவர்கள் ஸ்வர்க்கம் திரும்பினர்.

**பரீக்ஷித்**

பாண்டவர்கள் ஸ்வர்க்காரோகணத்திற்குப்பின், பரீக்ஷித் 36 வயதில் ராஜ்யபாரம் ஏற்றான். தர்மராஜ்யம் நடத்திவந்தான். ஒருசமயம் வேட்டையாடச்சென்று, தனியனாக ஆகி, தாகம் தாங்காமல் வனத்தில் சமீக முனிவரிடம் சென்று நீர் கேட்டான். தியானத்திலிருந்த முனிவர் பதில் சொல்லாததால் கோபமுற்ற பரீக்ஷித், பக்கத்தில் கிடந்த ஒரு செத்த பாம்பினை எடுத்து முனிவரின் கழுத்தில் போட்டுவிட்டு அரண்மனை திரும்பினான். இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட முனிவரின் புத்திரன் ச்ருங்கியானவர், பெருங்கோபமுற்று, இத்தகைய பெரும் பாவத்தைச் செய்தவன் தக்ஷகன் என்கிற பாம்பினால் தீண்டப்பட்டு ஏழு நாளில் மரணமடையட்டும் என்று சபித்தார். முனிவரின் சிஷ்யர் மூலமாக இந்த சாபத்தின் விவரம் பரீக்ஷித்துக்கு தெரிவிக்கப்பட்டது.

பரீக்ஷித்தும் உடனேயே முனிபுத்திரன் சாபம் தவிர்க்கமுடியாதது என்று உணர்ந்து, தன் உயிரை எவ்வாறேனும் காத்துக்கொள்ளத் தீர்மானித்தான். மணி, மந்திரம், ஔஷதம் என்றபடி, எல்லா உபாயங்களையும் கையாண்டான். ஏழு மாடிக்கட்டிடம் ஒன்று ஒற்றைத் தூணில் (மகாபாரதப்படி) நிற்கும்படி எழுப்பி, அதன் உச்சி தளத்தில் ராஜா பரீக்ஷித் இருந்தான். பாதுகாப்பை வலுப்படுத்தி, யாரும் ராஜாவைப் பார்க்கமுடியாதபடி, காற்றும் நுழையாதபடி செய்தான். ஏழாவது நாள், தக்ஷகன் தன் ஸக ஸர்ப்பங்களுடன் அந்தண வேஷம் பூண்டு, ராஜாவின் பவனம் நோக்கி வருகையில், வழியில் கச்யபர் என்ற பிராம்மணோத்தமரும் வேகமாக ராஜாவின் இருப்பிடத்திற்கு போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தான். விசாரிக்கையில், அவர் மிகவும் சக்திவாய்ந்த மந்திரங்களின் மூலம் ராஜாவைக் காப்பாற்றவே விரைந்துகொண்டிருப்பது தெரிந்தது. தக்ஷகன் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தி, கச்யபரின் சக்தியைப் பரீக்ஷிப்பதற்காக, ஒரு மாபெரும் ஆல மரத்தினைத் தான் பொசுக்கியபின்னர், பழையபடி புதுப்பிக்கச் சொன்னான். தக்ஷகனால்

சாம்பலாக்கப்பட்ட ஆலமரம், கச்யபரின் மந்திரசக்தியால் சாம்பலிலிருந்து உடனேயே துளிர்விட்டு, கிளைகளுடனும், விழுதுகளுடனும் பழையபடியே மாபெரும் விருக்ஷமாக மாறிய அதிசயத்தைக் கண்ட தக்ஷகன் நடுங்கினான்; ஏனெனில், கச்யபர் பாம்பு தீண்டி மரித்த ராஜாவை பழையபடி உயிர்ப்பித்துவிட்டால், தன் காரியம் கெட்டுவிடுமே, முனிவரின் சாபத்தை நிறைவேற்றாத அபராதத்திற்கும் தான் ஆளாகவேண்டுமே என்று பயந்தான். எப்படியோ சாமர்த்தியமாகப் பேசி, கசியபருக்கு ராஜாவிடமிருந்து கிடைக்கும் சன்மானத்தைப்போல் இரண்டு பங்கு திரவியம் கொடுத்து, அவரைத் திருப்பியனுப்பிவிட்டான். கச்யபர் ஜோதிஷ சாஸ்திரத்திலும் வல்லுனராக இருந்ததால், ராஜாவின் மரணம் அன்று நிச்சயம் என்று தீர்மானித்து, திரவியத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டார். கச்யபரின் கதை தேவி பாகவதத்தில் இதற்குமேல் சொல்லப்படவில்லை.

(வளரும்)

ஸனாதன தர்மப்புதிர்கள்

## மே வினாக்கள்

1. நோய்கள் இல்லாமல் இருக்க அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ் இப்படித் தொடங்கும்
2. அம்பாளின் மகா சக்திபீடம் எங்குள்ளது ?
3. ஜபந்திகா இவள் யார் ?
4. புத்தேள் உலகு வள்ளுவர் கூறுவது எதை ?
5. திருவாரூரில் விடங்கரின் பெயர்?
6. மகா ருத்ரம் என்பது என்ன ?
7. ஜோக் அருவி உத்பத்தி ஸ்தானம் எங்கு ?
8. அஷ்ட வஸுக்கள் யார் யார் ?
9. கையை சந்தனக்கட்டையாக வைத்து சந்தனம் அரைத்த நாயனார் பெயர்/
10. சித்தர்கள் சம்பாஷணையை இப்படிக் கூறுவர்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 24

## மிஸ் யூஜினியா போர்கினி



காஞ்ஜி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்வாமிகள் என்பவர் யார்? பொதுவாக மனிதர் என்று பொருள் கொள்ளுகிறோமே அப்படிப்பட்ட மனிதரா? அல்லவே அல்ல. அவரது முன் நான் எப்போது நின்றாலும் சரி அல்லது அவரை எப்போது ஸ்மரித்தாலும் சரி அவரை ஓர் ஒளியாகத்தான் பார்க்கிறேன். என் நண்பர்கள் அவரிடம் அழைத்துச் சென்ற நாள் முதல் அவர் ஜோதியால் ஆக்கப்பட்டவர் என்றுதான் பார்க்கிறேன். அந்த ஒளி பல சமயங்களில் வளர்வது போலவும், குறுகுவது போலவும் உணர்கிறேன்.

முதலில் நான் அவரைக் கண்டது இளையாற்றங்குடி எனும் க்ராமத்தில். ரமணீயமான ஆலயத்துக்கு அருகில் முகாம் அமைத்திருந்தார். நான் தங்கிய அந்த நாட்களில் அவரது உருவ அமைப்பை நிர்ணயிக்க முடியாமல் கிளம்பி விட்டேன். அடுத்து பலமுறை அவரை நான் பார்த்தபோது இன்னோர் அதிசய அனுபவம் உண்டாயிற்று. அவர் தம் ஜோதியை திடீரென்று அணைத்துக் கொண்டுவிட முடிகிறது. அப்போது அவர் சாதாரணமான மனித உருவில் தெரிந்தார். ஸூக்ஷ்மமான மேனி படைத்தவர் என்றும் தெரிந்தது. குருவின் உடம்பு என்பது என்ன? ஆன்மாவை தன்னுள்ளே வாங்கிக்

கொண்டு உள்ளே இருப்பது வெளியே தெரிகிற ஸ்படிகம் போன்ற ஒன்றுதான் குருவின் மேனி என்று நான் நேரடி அனுபவத்தின் மூலம் நிச்சயமாக கண்டு கொண்டு விட்டேன். நம் உள்ளம் அதிகம் ஆடாமல் இருந்தால் போதும். எத்தனையோ தூரமாயிருப்பினும் சாந்தி சூழலை அனுபவிக்கலாம். அவரது அருகில் இருக்கும்போது என்னாலேயே அவரது ஆன்ம அலைகளை உணர முடிந்தது.

தான். பலபேர் அவரது இடத்தில் தர்சனம் செய்து கொண்டிருப்பார்கள். போவதும் வருவதுமாக இருப்பார்கள். காலம் போய்க்கொண்டிருக்கும். ஆனால் ஏதோ வித்யாசமான உணர்வு இருக்கும். மனமசையாமல் இருக்கும், காலம் அசையாமல் இருக்கும். நிகழ்ச்சிகளுக்குப் பொருளே இல்லாமல் போகிறது.

ஒரு சமயம் அவரது முகாமில் இருக்கும்போது கீழே விழுந்து அடிபட்டுக்கொண்டேன். வலி தாங்க முடியவில்லை. விடியும் வரையில் வலியில் அரற்றிக் கொண்டிருந்தேன். அருகில் நகரம் கூட இல்லை. ஒரு க்ராமத்தில் ஒரு மனோகரமான தென்னஞ்சோலையில் நான் கிடத்தப்பட்டேன். அதற்கு ஒரு பெரியவர் அனுமதித்தார். நான் ஐரோபா புறப்பட காலம் வந்துவிட்டது. ஆசார்ய ஸ்வாமிகளிடம் அனுமதி கேட்டிருந்தேன். இத்தருணத்தில் எப்படிப் போவது? குழம்பித் தவித்த நான் மெதுவாக சாந்தப்படுத்திக் கொண்டேன். மெல்ல பூரண அமைதியும் வாய்த்தது.

ஆசார்யரின் அனுக்ரஹத்தில் நல்லபடியாகும் என்று உள்ளுணர்வு சொல்லியது. அவருடைய சான்னித்யத்தின் வலுவான அலைகளை என்னால் உணர முடிந்தது. ‘ஆண்டவன் தன் இறகுகளால் உன்னை அணைத்துக் கொள்வான். அவனது சிறகுக்குள்ளே நீ சுகமாக இருப்பாய்'' எனும் பைபிள் வாசகம் என் மனத்துள் ஓடியது. ஆசார்யரின் இறகின் கீழே நான் சுகமாகவே இருந்தேன்.

விடியும் போது என் கால் ஆரோக்யமாகவே இருந்தது. அவரது முன்னால் சர்வ சாதாரணமாக சப்பணமிட்டு அமர்ந்தேன். அவரும் என் ப்ரயாணத்துக்கு ஆசி வழங்கினார். குருவின் அருள் இருக்கும் போது என்ன கவலை?

# பெண்களின் பாண்டித்யம் அக்கால - இக்கால மாறுபாடு

பழங்காலத்தில், ஆசார்யாள் புது ஜீவன் ஊட்டி ஸ்தாபித்த வைதிக வாழ்க்கையில் புருஷர்கள் உத்யோகத்துக்குப் போய் ஸம்பாதிக்கவில்லை. க்ருஹத்திலேயே இருந்து கொண்டு விடிவதற்கு முன்னாலிருந்து ஒன்று மாற்றி ஒன்றாக அநுஷ்டானங்கள் செய்வதற்கே அவர்களுக்குப் பொழுது ஸரியாயிருக்கும். ஸம்பாவனை, மான்யம், குரு தட்சிணை முதலியவற்றிலிருந்தே அவர்களுடைய எளிய வாழ்க்கைக்குப் போதுமான வருமானம் கிடைத்துவந்தது. புருஷர்கள் இப்படி ஸதாவும் அநுஷ்டானபரர்களாக இருந்ததால் ஸ்த்ரீகளும் ஸதா அவர்கள்கூட இருந்துகொண்டு பல விதங்களில் அந்த அநுஷ்டானாதிகளுக்காக ஸேவை செய்யவே அவர்களுக்கும் பொழுது ஸரியாயிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்குப் பாண்டித்யம் அடியோடு அவச்யமில்லாமலும், பாண்டித்யத்தால் அவர்களுக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லாமலும் இருந்தது.

ஆனால் நம் காலத்தில் புருஷர்கள் நாள் பூராவும் - ஞீச்தூ- ஞுடிட்ஞு என்பது பூராவும் - ஆஃபிஸில் வேலை செய்தே ஸம்பாதிக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இதை மாற்றுவதற்கில்லை என்ற அளவுக்கு நிலைமை முற்றி விட்டது.

ஆக, இப்போது புருஷர்களுக்கு ஆபிஸ், அது போக மிஞ்சியுள்ள நேரத்தில் அரட்டை, பொழுதுபோக்கு என்று ஒரு தினுஸாக ஆகிவிட்டது. இதனால் மத ஸம்பந்தமான நம்முடைய ஏராளப் புஸ்தகங்கள் உள்பட ஆத்மாவையோ, புத்தியையோ, மனஸையோ வளர்த்துக் கொடுக்கிற எதையுமே - நல்ல இலக்கியம் உள்பட எதையுமே - அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.

இதைக் கவனிக்கும்போது இதற்கு நிவாரணம் ஆசார்யாள் சொன்னதற்கு ஒரு தினுஸில் மாறுதலாகப் போனால்தான் கிடைக்கும் என்றே தோன்றுகிறது. இப்படி நான் சொல்வதே பொதுவாகப் பார்த்தால் மஹா பாபம்தான், பரம அபசாரமும்தான். அது எனக்குத் தெரியாமலில்லை. அவர் காலம், நம் காலம் என்று சொல்லிக் கொண்டு காலத்தை அநுஸரித்து, என்றைக்கும் சாச்வதமான தர்மத்தை மாற்றுவது துளிக்கூட முறையேயில்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரிகிறது.

இருந்தபோதிலும் புருஷர்கள் ஆபீஸ் போய்த தானாக வேண்டும் என்று ஆனதில் ஸ்த்ரீகள் நிலைமை எப்படி ஆகியிருக்கிறது என்பதைக் கவனிக்கிறபோது இன்றைக்கு அவரே இருந்தால் என்ன சொல்லியிருப்பாரென்று என் அடி மனஸிலிருந்து ப்ரார்த்தித்துப் ப்ரார்த்தித்து, யோஜித்து யோஜித்துப் பார்க்கிறபோது தோன்றுகிறதோ அதையே துணிந்து சொல்கிறேன் இன்றைக்கு ஈச்தூ - ஞுடிட்னு பூராவும் வீட்டிலே இருக்கிற ஸ்த்ரீகளுக்கு யஜ்ஞாதி அநுஷ்டானங்களில் ஸஹாயம் பண்ணுகிற கார்யமில்லை. வீட்டு நிர்வாஹத்தில் அவர்கள் பல கார்யம் செய்ய வேண்டியிருந்தாலும், கார்யம் செய்ததில் களைத்து விச்ராந்தி செய்து கொண்ட பிற்பாடும் அவர்களுக்குப் பொழுது மிச்சம் இருக்கிறது. அது வீணிலோ, வம்பிலோ போகாமலிருக்க வேண்டுமானால் அதற்கு வழிதான் ஆசார்யாள் அன்றைக்குச் சொன்னதற்கு வித்யாஸமான ஒன்றாகத் தெரிகிறது. அதாவது, இன்றைக்கு ஸ்த்ரீகள்தான் தங்களுக்கு மிஞ்சும் பொழுதையெல்லாம் நம்முடைய இதிஹாஸ - புராணங்கள், ஸ்தோத்ரப் புஸ்தகங்கள், அது மட்டுமில்லாமல் உசந்த காவ்யங்கள் ஆகியவற்றை நன்றாகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் பண்ண முடியும் என்பது.

அவர்களுடைய பொழுது நல்ல விதமாகக் கழிவதற்கு இது வழி என்பது மாத்திரமில்லை. எத்தனையோ யுகத்துக்கு முன்னாலிருந்து ஆரம்பித்து, தொடர்ந்து வந்துள்ள நம்முடைய மஹத்தான கலாசாரத்துக்கு உயிரூட்டுகிற புஸ்தகங்கள் நம் காலத்தில் செத்துப் போய் விட்டன என்ற பெரிய பழி, மஹத்தான களங்கம் நமக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இப்படி ஸ்த்ரீகளாவது அவற்றைப் படித்துப் ப்ரயோஜனப்படுத்திக் கொண்டு ரட்சித்துக் கொடுப்பதுதான் வழி.

இப்படித் தாங்கள் படித்தறிந்ததன் ஸாராம்சத்தை அவர்கள் புருஷமார்களுக்கும் சொல்லி அவர்களுக்கும் நம்முடைய ஸமய கலாசாரத்தில் ஒரு அபிருசியை ஏற்படுத்தவேண்டும். தானாகப் படித்துத் தெரிந்து கொள்ள ப்ரியப்படாதவனாக இருந்தாலும், பெண்டாட்டி சொல்கிறாள் என்றால் எவனும் கேட்டுத் தெரிந்து கொள்வான்.

நம்முடைய புராதனமான, புனிதமான இலக்கியச் செல்வம் என்பது நம் காலத்தோடு கொள்ளை போகாமலிருக்க வேண்டுமானால் அதற்கு இப்படி ஸ்த்ரீகள் பண்டிதைகளானால்தான் முடியும் என்று ப்ரத்யட்ச வ்யவஹாரத்தில் ஏற்பட்டிருப்பதால்தான் துணிந்து சொன்னேன்.

ஆசார்யாள், பாண்டித்யம் என்கிறதை வேதத்தில் பாண்டித்யம் என்றே கருதி, வேதாத்யயன அதிகாரம் ஸ்த்ரீகளுக்கு இல்லாததால்தான் அவர்கள் பாண்டித்யம் பெறுகிறதற்கில்லை என்று சொன்னார். நானும் இப்போது வேதத்தில் கை வைக்கவில்லை. ஸ்த்ரீகளை வேதங்கள் படிக்கும்படியாகச் சொல்லவில்லை. வேதம் தவிர்த்து இதிஹாஸ - புராண - ஸ்தோத்ர - காவ்யாதிகள்தான் படித்துத் தெரிந்து கொள்ளச் சொல்கிறேன்.

இதை பாபமாகவோ அபசாரமாகவோ நினைக்காமல், இதற்கு ஆசார்யாள் ஆசீர்வாதம் பண்ணுவார் என்ற நம்பிக்கையுடனேயே சொல்கிறேன்.

ஆசார்யாள் பெயரிலுள்ள இந்த மடத்து த்வாராவே (மூலமாகவே) இப்படிப் பெண்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்கு எந்த விதமெல்லாம் உதவி செய்யலாமோ, இன்ஸென்டிவ் கொடுக்கலாமோ அவ்வளவும் அவருடைய ஆசீர்வாதத்துடனேயே செய்ய வேண்டுமென்று எனக்கு இருக்கிறது.

மொத்தத்தில் விஷயம் பெண்கள் உத்யோகத்துக்குப் போகாமல் க்ருஹிணிகளாகவே இருந்து கொண்டு க்ருஹ ஸம்ரக்ஷணம் செய்வதே ச்ருதி - ஸ்ம்ருதிகளின் வழிப்படியான ஸ்த்ரீ தர்மம். அதற்கு அநுகூலமாகவே ஆசார்யாள் அவர்களுக்குப் பாண்டித்யம் வேண்டியதில்லை என்று சொன்னது. இப்போது (நான்) சொல்கிறதும் அவளுடைய க்ருஹிணி தர்மத்துக்கு விரோதமில்லை. அவளை உத்யோகத்துக்குப் போகச் சொல்லவில்லை. உத்யோகத்துக்குப் போகிற புருஷன் கோட்டைவிட்ட கலாசார செல்வத்தை அவளாவது ஸம்ரிக்ஷித்து தரட்டும், அவள் வழியாகவே அவனுக்கும் அது கொஞ்சம் போகட்டும் என்றே சொல்கிறேன்.

--தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி

## மகாகவி

# காளிதாஸரின் ஸ்தோத்ரங்கள்

சிவமகிமை



இதை இரண்டு பகுதியாகப் பார்ப்போம். ஒன்று ஸப்தரிஷிகள் செய்தது, இரண்டாவது சிவனை கிண்டல் செய்த முனிவனுக்குப் பார்வதியின் பதில். முதலில் சிவன் தன் கல்யாணத்துக்காக ஸப்தரிஷிகளை ஹிமவானிடத்தில் தூதுரைக்க நினைக்கிறார். அப்போது அவர்கள் செய்யும் ஸ்தவம். ( குமாரசம்பவம் 6ஆம் ஸர்கம்)

**यत्ब्रह्म सम्यगाम्नतम् यदग्नौ हुतम्**
**यच्चतप्तम् तपस्तस्य विपक्वम् फ्लमध्य नः ।।**

**யத்ப்ரம்ம ஸம்யகாம்னாதம் யதக்னௌ ஹுதம் ।**
**யச்சதபதப்தம் தபஸ்தஸ்ய விப்கவம் பலமத்ய நः ।।**

வேதமானது நன்றாக படிக்கப்பட்டது, விதிப்படி அக்னியில் ஹோமம் செய்யப்பட்டது, தவமும் நன்றாக செய்யப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் பலன் இன்றுதான் கிடைத்தது.

**यदध्यक्षेण जगताम् वयमारोपिताश्त्वया ।**
**मनोरथस्याविषयम् मनोविषययमात्मनः ।।**

**யத்யக்ஷேண ஜகதாம் வயமாரோபிதாஸ்த்வயா ।**
**மனோரத்ஸ்யாவிஷயம் மனோவிஷயமாத்மன: ।।**

ஏனெனில் உலகின் தலைவராகிய உங்களால் நாங்கள் ஆசைக்கும் எட்டாத உங்களுடைய மனம் என்னும் உன்னத ஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

**यस्य चेतसि वर्तेथाः स तावत्क्रितिनाम् वरः**
**किम् पुनर्ब्रह्मयोनेर्यस्तव चेतसि वर्तते ।।**

**யஸ்ய சேதஸி வர்தேதா: ஸ க்ருதினாம் வர: ।**

**கிம் புனர்ப்ரஹ்மயோனேர்யஸ்தவ சேதஸி வர்ததே ।।**

*எவன் உம்மை நினைப்பானோ அவன் பாக்யசாலி எனப்படுவான். வேதங்களுக்கு உத்பத்தி ஸ்தானமான உமது மனத்தில் யார் இருப்பவரோ அவன் சிறந்தவன் என்று கூறவேண்டுமா?*

**सत्यमर्काच्च सोमाच्च परमध्यास्महे पदम्**

**अद्य तूच्चैस्तरम् ताभ्याम् स्मरणानुग्रहात् तव ।।**

**சத்யமர்க்காச்ச ஸோமாச்ச பரமத்யாஸ்மஹே பதம் ।**

**அத்ய தூச்சைஸ்தரம் தாப்யாம் ஸ்மராணுனுக்ரஹாத் தவ ।।**

*நாங்கள் சூர்ய சந்த்ரமண்டலத்திற்கும் மேலே இருக்கிறோம். இப்போது உங்களால் நினைக்கப்படுதல் என்னும் நிலையில் மிகவும் உன்னத நிலையை பெற்றிருக்கிறோம்.*

**त्वत्साम्भाविताअत्मानम् बहु मनयामहे वयम्**

**प्राय: प्रत्ययमाधते स्वगुणेषूतमादर: ।।**

**த்வத் ஸம்பாவிதாத்மானம் பஹு மன்யாமஹே வயம் ।**

**ப்ராய:ப்ரத்யயமாதத்தே ஸ்வகுணேஷூத்தமாதர: ।।**

*உங்களால் மதிக்கப்பட்டதால் எங்களை நாங்களே அதிகம் மதிக்கின்றோம். பெரியோர்களின் ஆதரவு சிறியவர்கள் தமது பணிகளில் அதிகமாகவே நம்பிக்கைக் கொள்வர்.*

**या न: प्रीतिविरूपाक्ष तव निध्यानसम्भवा ।**

**सा किमावेध्यते तुभ्यमन्तरात्मासि देहिनाम् ।।**

**யா ந: ப்ரீதிவிரூபாக்ஷ தவ நித்யானஸம்பவா ।**

**ஸா கிமாவேத்யதே துப்யமந்தராத்மாஸி தேஹினாம் ।।**

*உங்களை தர்சனம் செய்தலை நாங்கள் உங்களுக்கு எடுத்துக்கூற வேண்டியதில்லை. ஏனென்றால் நீங்களேதான் ஸகல சைதன்யத்திற்கும் அந்த்ராத்மாவாக இருக்கின்றீர்.*

*(தொடரும்)*

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

## 4. ஸன்யாஸம்

வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றை முறைப்படி குருவிடம் கற்று, அவருக்கு தக்ஷிணை அளித்து, அவருடைய அனுமதி பெற்று நல்ல குணமுள்ள காரிகை ஒருவளை கைபிடித்து திருமணம் செய்து கொண்டு இல்லறம் சாத்திர முறைப்படி நடத்தி, குடும்ப நிர்வாகத்தினை தனது மகனிடம் அளித்து வாழ்வில் வைராக்கியம் உண்டாகி, இறை தொண்டு செய்ய வேண்டி, வானப்ரஸ்த வாழ்க்கையை கடைபிடித்து, வாழ்வில் நான்காம் கடைசி பகுதியை பற்றுகள் யாவற்றையும் துறந்து ஸன்யாஸ தர்மத்தை ஏற்று, மோக்ஷத்தில் மட்டும் விருப்பம் கொண்டு மேற்கொள்ளப்படும் வாழ்க்கையே ஸன்யாஸம் அல்லது துறவு என்பது.

ஸன்யாஸம் என்ற சொல்லுக்கு முற்றும் துறத்தல் என்று பொருள். வெளிப் பற்றுக்களை துறந்து மனதில் அவற்றில் பற்று கொண்டிருப்பவரின் வாழ்க்கை ஸன்யாஸ வாழ்க்கை ஆகாது.

வள்ளுவர் பெருந்தகை

'நெஞ்சிற்றுவார் துறந்தார் போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்'

என்று இத்தகையவர்களை தனது திருக்குறள் 28-ம் அதிகாரம் 6ம் குறளில் சாடுகிறார். இந்த குறளுக்கு மனதில் துறவு கொள்ளாதவர் துறவிகள் போன்று வஞ்சித்து வாழ்வார்கள் எனில் அவர்களைக் காட்டிலும் இரக்கமற்றவர்கள் உலகில் எவரும் கிடையாது என்று பொருள்.

வெளிவேடங்கள் இல்லை எனினும் மனதில் பற்றற்று வாழ்பவரே ஸன்யாஸிகளில் சிறந்தவர் என்று கருதப்படுவார். ஐம்புலன்களையும் அடக்கி அவற்றின் மூலம் கிடைக்கும் சுகம் நிரந்தரமானது அல்ல என்ற எண்ணம் மேலோங்கி மெய்பொருளாம் இறைவனையே அடைய அயராது பாடுபட்டவர்களையே ஸன்யாஸி என்பர். அவர்களே தான் மோக்ஷ இன்பத்தை அடைவர்.

வள்ளுவரும் இதனை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்

'இன்பமிடையறா தீண்டும் அவா
வென்னும் துன்பத்துட்டுன்பங் கெடின்'

*இந்த குறளின் பொருள் பின்வருமாறு:*

*ஆசை மிகுந்திருக்க பேரின்பமாகிற மோக்ஷம் கிடைப்பது அரிது என்பது அதிகாரம் 37 குறள் 9.*

*உடல் மீதுள்ள பற்று நீங்க மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை, மகப்பேறு ஆசை ஆகியதான பலவகை ஆசைகளை வெறுத்து புறந்தள்ளி சரீரமே நான் என்கின்ற அகப்பற்றான அகந்தையும், வீடு, பொருள், மனைவி, மக்கள் யாவும் என்னுடையது என்கின்ற புறப்பற்றும் நீங்கி ஆத்மாவொன்றையே நினைத்து உலகத்தாருடன் பழகிக் கொண்டிருந்தாலும் எங்கனம் பழுத்த விளாம்பழம் ஓட்டோடு உள் ஒட்டாமல் தனித்து இருக்கிறதோ, தாமரை இலை நீரிலேயே இருந்தாலும் அதில் ஒட்டாமல் இருக்கின்றதோ அங்கனம் தனித்து வாழ்ந்து சகித்திருப்பவரே ஸன்யாஸி.*

*யான், எனது என்னும் செறுக்கறுப்பான் வானோர்க்கு இந்த உலகம் புகும் என்பது வள்ளுவர் வாக்கு 35.6*

*மனித உடல், மனிதன் எங்கனம் வாழ வேண்டும் என்று காட்டிக் கொடுக்கின்றது.*

*கையில் ஐந்து விரல்கள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு தனிப்பெயர். அதனதன் உருவத்திலும் வித்தியாஸம் உள்ளன. இந்த விரல்களை 1. சுண்டு விரல், 2. மோதிரவிரல், 3. நடுவிரல், 4. ஆள்காட்டி விரல், 5. கட்டை விரல் என்று தனித்தனி பெயரிட்டு அழைக்கப்படுகிறது.*

*திருமண காலத்தில் மணமகன் மணமகள் கையை தனது சுண்டுவிரலுடன் அவளின் சுண்டுவிரலை கோர்த்து இணைத்துக் கொள்வதால் இந்த விரல் பெண் ஆசைக்கு அறிகுறியாக்கப்பட்டுள்ளது.*

*மோதிரத்தினை சுண்டுவிரலுக்கு அடுத்ததான விரலில் தான் அணிவார்கள் என்பதால் அதற்கு மோதிரவிரல் என்று பெயர் ஏற்பட்டது. இதனால் இந்த விரல் பொருளாசையைக் குறிக்கிறது. சடங்குகள் காலத்தில் அணியப்படும் 'பவித்ரம்' என்ற தர்ப்பையும் இந்த விரலிலேயேதான் அணியப்படுகிறது என்பதனையும் கவனிக்க வேண்டும். அடுத்ததான நடுவிரல் எதற்கும் பயன்படுத்தப்படாமல் இருப்பதனால் அதனை மண்ணாசைக்கு ஒப்பிடுகின்றனர்.*

*அதற்கடுத்த விரல் ஆள்காட்டி விரல் எனப்படுகிறது. எவரையேனும் எச்சரிக்க வேண்டும் எனில் இந்த விரல்தான் உபயோகப்படுகிறது. உன்னை தொலைத்து விடுவேன் என்று அடுத்தவரைப் பயமுறுத்த உபயோகப்படுவது இந்த விரலே என்பதால் இதனை ஆணவத்தின் எடுத்துக்காட்டாகச் சொல்வார்கள்.*

அடுத்து எஞ்சி இருப்பது கட்டைவிரல்தான். இது மற்றய நான்கு விரல்களினின்றும் தனித்து உள்ளது. மிகவும் குட்டையானது, பருத்துள்ளது. இந்த விரலின் உதவி இல்லை எனில் மற்ற விரல்களால் எந்த செயலையும் செய்ய இயலாது.

மற்றய நான்கு விரல்களும் சேர்ந்து இருக்கின்றன. பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை ஆகியவற்றுடன் இணைந்திருக்கும் விரல் அகம்பாவமாக உள்ளது. அந்த அடுத்தவரை இட்டுக்காட்டி பழிக்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதால் அதனை ஆள்காட்டி விரல் எனப்படுகிறது. மற்றய மூன்று விரல்களும் அடங்கிய நிலையில் இந்த ஆள்காட்டி விரல் மற்றவர்களை எச்சரிக்கப் பயன்படுத்தப்படும். இந்த நிலை ஒரு உண்மையை நமக்குக் காட்டிக் கொடுக்கிறது. இந்த விரலால் நீ அடுத்தவரை பழிக்க மற்ற மூன்று விரல்களும் உன்பக்கம் திரும்பி, உன்னை மற்றவர்கள் பழிக்க வேண்டும் என்பதை உபதேசிக்கின்றது.

இங்கனம் இந்த நான்கு விரல்களும் சேர்ந்து செய்யும் காரியங்களை எல்லாம் அதில் ஈடுபடாமல் தனித்திருந்து சாக்ஷியாக பார்த்துக் கொண்டிருக்கிறது கட்டைவிரல். இந்த நான்கு விரல்களும் இணைந்து கட்டைவிரலுடன் சேரும்போது கைமுஷ்டி எனப்படுகிறது. அதற்கு பலம் அதிகம் உள்ளது. ஆக கட்டைவிரலை விட்டு மற்றவை தனியாக எதனையும் சாதிக்க முடியாது என்பது உறுதியாகிறது.

ஆள்காட்டி விரல் வணங்க மற்ற மூன்று விரல்களும் ஒதுங்கி விடும். அப்படி வணங்கிய ஆள்காட்டி விரல், கட்டை விரலை அண்டிவருவது தான் இறை அடி சேருதல் என்பது. மூவாசைகளும், ஆணவமும் இருக்க இறைஅருள் கிட்டுவது கடினம். அவற்றைத் துறந்து ஆணவத்தையும் இழந்து, இறைவன் தாளினைப் பற்ற, இறைவனுடன் கலந்து பேரின்பம் அடைய முடியும் என்ற மகத்தான தத்துவத்தை ஸன்யாஸ தன்மையை நமது கைவிரல்களே நமக்கு காட்டிக் கொடுக்கின்றன. இதனை புரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் தூங்கி கண்விழிக்கும் போது கைகளைப் பார்க்க வேண்டும் என்பதை உணர்த்தினார்கள்.

இந்த தத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்தி யாவரும் பின்பற்ற மௌனமாக இருந்து செயலில் செய்து காட்டியவர் ஆதிகுருவாம் கல்லால் மரத்தடியில் அமர்ந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தி.

(தொடரும்)

# சதாசிவபிரமேந்திரர்

*சதாசிவபிரமேந்திரர் மதுரை மாநகரில் 17-18 ஆம் நூற்றாண்டில் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தவர்.இவரின் தந்தை சோமநாத அவதானியார், தாயார் பார்வதி அம்மையார். சதாசிவ பிரமேந்திரரின் இயற்பெயர் சிவராமகிருஷ்ணன் என்பதாகும். இளம் வயதிலேயே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இவர் பரமசிவேந்திராள், வேங்கடேச அய்யர் ஆகியோரிடம் முறையாக சாஸ்திரங்களை கற்று தேர்ந்தார். பரமசிவேந்திராளிடம் கல்வி கற்று வரும் போது இவரின் திறமைகளை கேள்விப்பட்டு மைசூர் மகாராஜா இவரை சமஸ்தான வித்வானாக்கி கொண்டார். மைசூர் சமஸ்தானத்தில் மற்ற வித்வான்களை எல்லாம் வாத திறமையில் தோற்கடித்தார். இதை கேள்வியுற்ற அவரின் குரு பரமசிவேந்திராள் இவரை அழைத்து ஊர் வாயெல்லாம் அடக்க கற்றுக் கொண்ட நீ உன் வாயை அடக்க கற்றுக் கொள்ளவில்லையே என்று கூறியுள்ளார். உடனே மைசூர் மகாராஜா சமஸ்தான வித்வான் பதவியை துறந்து இனி பேசுவதில்லை என்று முடிவு செய்து மவுனத்தை கடைபிடித்து வந்தார். மேலும், மனிதர்கள் நடமாட்டம் அற்ற காடு, மலைப் பகுதிகளில் சென்று வசிக்க ஆரம்பித்தார். தீவிர யோக சாதனைகளில் ஈடுபட்டார். தவத்தின் விளைவாய் தான், தனது என்ற எண்ணங்கள் நீங்கி ஸ்திதப் பிரக்ஞன் ஆனார். அதுமுதல் சதா பிரம்ம நிலையில் லயித்திருப்பது சதாசிவ பிரம்மேந்திரரின் வழக்கமானது. ஊன் இல்லை. உறக்கம் இல்லை. உணவு இல்லை. உடை இல்லை ஆசை, அபிலாஷைகளைத் துறந்த அவதூதராக நடமாடத் துவங்கினார்.*

*ஒருமுறை கொடுமுடியில் காவிரி ஆற்றின் குறுக்கே இருந்த பாறையில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார் சதாசிவ ப்ரமேந்திரர். தூரத்தே இருந்து அவர் தவம் செய்வதை மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் ஆற்றில் திடீரென வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி மகானை அடித்துச் சென்றுவிட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் வெள்ளத்தினால் அவர் அடித்துச் செல்லப்பட்டு விட்டார் என்றே மக்கள் கருதினர். பல நாட்கள் கழித்து வெள்ளம் வடிந்தது. அப்போது வீடு கட்ட மணல் எடுப்பதற்காக வந்த சிலர் ஆற்றின் ஒருபுறத்தில் தோண்டினர். அப்போது திடீரென மண்வெட்டியில் இருந்து ரத்தமாக வந்ததைக் கண்டு அஞ்சிய அவர்கள் மேலும் தோண்டிப் பார்த்த போது,. உள்ளே அமர்ந்த நிலையில் கண்களை மூடி சதாசிவர் தவம் செய்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர் தலை மீது மண்வெட்டி பட்டு, அந்தக் காயத்திலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மக்கள் கூக்குரல்*

கேட்டுக் கண் விழித்த சதாசிவர், எதுவும் நடக்காதது போல் அவ்விடம் விட்டு வேகமாகச் சென்று விட்டார்.

புதுக்கோட்டையை அடுத்த திருவரங்குளம் காட்டுப் பகுதியில் சுவாமிகள் ஒருமுறை சுற்றிக் கொண்டிருந்தார். மகானைப் பற்றிக் கேள்விப்பட்ட புதுக்கோட்டை மன்னர், எப்படியாவது மகானிடம் பேசி, தன்னோடு அரண்மனைக்கு அழைத்துச் செல்ல விரும்பினார். அதனால் மகான் செல்லுமிடமெல்லாம் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். இப்படியே பல நாட்கள் கடந்தன. மன்னனும் ஊன், உறக்கமின்றி மகானையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார். மகான் சதாசிவர் மனம் இரங்கவே இல்லை.

பின் ஒருநாள், ''என்னுடன் வராவிட்டாலும் பரவாயில்லை எனக்கு நீங்கள் மந்திர தீக்ஷை அளித்தால் போதும்'' என சதாசிவரைத் தொழுதார் மன்னர். உளம் இரங்கிய சதாசிவரும், மணலில் தக்ஷிணாமூர்த்தி மந்திரத்தை எழுதிக் காண்பித்தார். அம்மந்திரத்தையே தனக்கான உபதேசமாகக் கொண்ட மன்னர், அவர் கைப்பட்ட அம்மணலை தமது ஆடையில் எடுத்துச் சேகரித்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றார். அவர் வரைந்து காட்டிய அக்ஷரங்களைக் கொண்டு ஒரு யந்திரம் ஸ்தாபித்து, அம்மணலை ஒரு தங்கச் சிமிழுக்குள் வைத்து பூஜை செய்து வரலானார். (இன்றளவும் புதுக்கோட்டை அரண்மனையில் அந்தச் சிமிழ் பாதுகாக்கப்பட்டு, பூஜை செய்யப்பட்டு வருகிறது.)

இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவராகக் கருதப்படும் இம்மகான் மானஸ ஸஞ்சரரே, சர்வம் ப்ரம்ம மயம், பிபரே ராமரஸம், ப்ரூஹி முகுந்தேதி போன்ற பல புகழ்பெற்ற கீர்த்தனைகளையும், பிரம்ம சூத்ர வ்ருத்தி, ப்ரம்ம தத்வ பிரகாசிகா, யோக சுத்தாகரா, ஆத்ம வித்ய விலாஸம் போன்ற பல நூல்களையும் எழுதியிருக்கிறார்.

பல்வேறு அற்புதங்கள் புரிந்து, பலரது ஆன்ம ஞானம் சிறக்கக் காரணமாக இருந்த மகான் சதாசிவ பிரம்மேந்திரர், 1753-ம் ஆண்டில் சித்திரை மாதத்து தசமி திதி அன்று, கரூரை அடுத்த நெரூரில், ஜீவ சமாதி ஆனார்.

நெரூர் ஆலயத்தில் சதாசிவ பிரமேந்திராள் சமாதி அடைந்த இடத்தில் வில்வமரமும், சுயம்பு (தான்தோன்றி) இலிங்கமும் அமைந்திருக்கிறது. இங்கு வேண்டிக் கொள்பவர்களுக்கு அமைதியும், செல்வமும் பரிபூரணமாக கிடைக்கும் என்று நம்பிக்கை உண்டு. இத்தலத்தில் பௌர்ணமி பூசை, ஒவ்வொரு வியாழக்கிழமையும் குரு பூசை , சித்திரை மாத குரு வார பூசை போன்றவைகள் மிக சிறப்பாக கொண்டாப்படுகிறது.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## காமன் பட்ட பாடு

இதென்ன? காமன்தான் எல்லரையும் பாடாபடுத்துகிறானே அவனுக்கு என்ன பாடு ? இப்படி சிஷ்யர் கேட்க பௌராணிகர் கூறலானார். ஸதாசிவத்தின் இடப்புறத்திலிருந்து ப்ரம்மாவும். வலப்புறத்திலிருந்து விஷ்ணுவும், இதயத்திலிருந்து ருத்ரரும் தோன்றினார்கள். ஒரே சிவம் மூன்றாகக் காட்டி கொண்டது. தன்னுடைய மன வலிமையால் பத்து மானஸபுத்ரர்களை உண்டாக்கினார். (மரீசி, அத்ரி, புலஹ பௌலஸ்த்யர், க்ரது, அங்கிரஸ், வசிஷ்டர், நாரதர், தக்ஷர், ப்ருகு). ஸந்த்யா என்னும் புத்ரியை காலையிலும் ஜபந்திகா என்பவளை இரவிலும் தோற்றுவித்தார். தன்னுடைய மானஸபுத்ரர்கள் ப்ரஜாபதிகளாக இருப்பர், ஆயினும் அவர்கள் எப்படி காம வசமாவர் என்று நினைத்தார். அவர்கள் காமவசம் அடைந்தால்தான் ப்ரஜைகள் உண்டாவர். இப்படி நினைவில் மூழ்கியபோது ஓர் அதி ஸௌந்த்ரயமான புருஷன் அவரெதிரில் தோன்றினான். அவனிடம் தெய்வீக வில்லையும் ஐந்து மலர் பாணங்களையும் தந்து ''ஹே புருஷனே நீ போய் எல்லா மக்களின் மனதிலும் காமத்தை உண்டாக்கு. உன் பாணங்களால் தாக்கப்படாத எவனும் இருக்கக் கூடாது. சிவன் , விஷ்ணு, ஏன் நானும் இதிலிருந்து தப்பக்கூடாது. இப்போதே போ நான் சொன்னதைச் செய் ப்ரஜைகளை உண்டு பண்ணு' என்றார்.

அங்கிருந்த ரிஷிகள் அவனுக்குக் காமன் என்று பெயரிட்டனர். கந்தர்பன் மன்மதன் என்றும் அவன் அழைக்கப்பட்டான். வஸந்த காலம் துணையாகவும், தென்றல், பால் நிலவு, இனிய கானம் இவைகளும் துணை நின்றன. காமனும் இந்த இடத்திலேயே தன் சக்தியை பரீக்ஷிக்க நினைத்து தன் மலர் பாணங்களை ரிஷிகளின் மீதே ஏவினான். என்ன ஆச்சர்யம் அங்கிருந்த சராசரங்கள் அனைத்தும் காமத்தில் மூழ்கின. விபரீதமாக ப்ரம்மாவும் காமவசத்தில் ஆழ்ந்து தன் பெண் ஸந்த்யாவை மோகித்தார். காமனும் திருப்தி அடைந்தான். நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து கொண்டிருந்த தர்மதேவதை விபரீதங்களைத் தடுக்க சங்கரரைத் த்யானிக்க அவரும் ப்ரஸன்னமானார். ப்ரம்மாவின் விபரீத எண்ணத்தை அறிந்து அவரை மன்னித்தார். காமனும் தன் விளையாட்டை நிறுத்தினான். ப்ரம்மாவும் ப்ராயச்சித்தமாக யாரும் தாய், தமக்கை,

பெண் இவர்களிடம் காம எண்ணத்தை ஒழிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். அவமானத்துடன் அங்கிருந்து வெளியேறினார். ரிஷிகள் அனைவரும் வெட்கித் தலைகுனிய தக்ஷன் வருத்தத்தில் கண்ணீர் பெருக்க அதிலிருந்து அதி ரூப ஸௌந்தர்யமான பெண் தோன்றினாள். அவளே ரதி. தன்னுடைய விபரீத போக்குக்கு காமனே காரணம் என்பது ப்ரம்மாவுக்குத் தெரியும். அவன் மீது கோபம் கொண்டு நீ சங்கரரின் நெற்றிக்கண் தீயில் சாம்பலாவாய் என்று சாபம் கொடுத்தார். நடு நடுங்கின காமன் உங்கள் கட்டளைப்படித்தான் நான் செய்தேன், சாப விமோசனம் கொடுங்கள் என்று கூற, அவரும் சங்கரர் எப்போது மணம் முடிக்கிறாரோ அப்போது உடல் பெறுவாய் என்றார். தக்ஷனும் தன் பெண் ரதியை காமனுக்கு மணம் முடித்தான். ஸந்தயா தனக்கு நேர்ந்த விபரீதத்தை தாங்காமல் கானகம் சென்று தவத்தில் ஆழ்ந்தாள். வசிஷ்ட ரிஷி அவளுக்குத் த்யானக்கலையை உணர்த்தினார். ரிஷி மேதாவதியின் வேள்வியில் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட அவள் தூய்மை பெற்று அருந்ததியாக ஜனித்து வசிஷ்டரை மணந்தாள்.

தன் அவமானத்தத் தாங்காத ப்ரம்மா சங்கரரை காமத்தில் ஆழ்த்தத் தூண்ட அது விபரீதமாக முடிந்தது. சங்கரன் நுதல் விழி திறக்க காமன் சாம்பலானான். ரதியும் தன்னுடல் நீத்தாள். பலகாலம் கழித்து காமன் ப்ரத்யும்னனாக பிறக்க ரதி சம்பாசுரனின் பெண் மாயாவதியாகப் பிறந்தாள். இந்த அசுரனை மாய்த்து ப்ரத்யும்னன் மாயாவதியை மணம் முடித்தான். காமதேவனும் ரதியும் இணைந்தனர். இதுவே காமன் பட்ட பாடு.

*அடக்கம் என்பது விநயம். நம்பிக்கை என்பது ச்ரத்தை. இந்த இரண்டுமே நமக்கு இரண்டு கண் மாதிரி. குரு என்றால் வழி காட்டுபவர், அந்த வழியில் போகணுமென்று திரும்பத் திரும்பப் பார்த்தோமோல்லியோ? கண் இருந்தால்தானே ஒரு வழியில் போக முடியும்? அப்படி நமக்கு இரண்டு கண்களாக இருப்பவை விநயமும் ச்ரத்தையுந்தான். இந்த இரண்டில் ஒன்று இருந்தாலே மற்றதும் தன்னால் வந்துவிடும். ஒன்றிடம் நாம் அடங்கிக் கிடக்கிறோமென்றாலே அதுதான் நமக்கு நல்லது செய்யும் என்ற த்ருட நம்பிக்கையில்தானே அப்படிக் கிடக்கிறோம்? அதே மாதிரி, ஒன்றிடம் நாம் அதுவே பரம ப்ரயோஜனம் தருமென்றால் த்ருட நம்பிக்கை வைக்கிறோமென்றால் அந்த ப்ரயோஜனத்தைப் பெற அதனிடம் அடங்கிக் கிடக்கத்தானே செய்வோம்?*

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

जय जय जप्यजये जयशब्द परस्तुति तत्पर विश्वनुते
इण्झणझिन्झिमिझिन्क्रुत् नूपुर सिन्चित मोहित भूतपते ।
नटितनटार्तनटीनट नायक नाटित नाट्य सुगानरते
जय् जय हे महिषाशुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। ९।।

**ஜய ஜய ஜப்யஜயே ஜயசப்த பரஸ்துதி தத்பர விஸ்வனுதே**
**ஜணஜணஜிஞ்சிமிஜிங்க்ருத நூபுர ஸிஞ்சித மோஹித பூதபதே ।**
**நடித நடார்த நடீனட நாயக நாடித நாட்ய ஸுகானரதே**
**ஜயஜய ஹே மஹிஷாஸுரமர்தினி ரம்யகபர்தினி சைலஸுதே । 9 ।**

*பகைவர்களால் வெல்லமுடியாதவளே ஜய ஜய எனும் கோஷத்துடன் உலககினரால் போற்றப்படுபவளே ஜண ஜண என்று ஒலித்து சிவபெருமானை மோகத்தில் ஆழ்த்தும் கொலுஸுகளை அணிந்தவளே நடனம், நாட்யம் நாடகம், கானம் என்று விதவிதமான கேளிக்கைகளில் ஆர்வமுடையவளே மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலை மகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

अयिसुमनः सुमनः सुमनः सुमन; सुमनोहरकान्तियुते
स्रितरजनी रजनीरजनी रजनीरजनीकरवक्त्रव्रुते ।
सुनयन विभ्रमरभ्रमरभ्रमर भ्रमरभ्रमराघिपते
जय जय हे महिषासुरमर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १० ।।

**அயிஸுமன:ஸுமன:ஸுமன;ஸுமன:ஸுமனோஹரகாந்தியுதே**
**ஸ்ரீத ரஜனீ ரஜனீ ரஜனீ ரஜனீரஜனீக்ருதவக்த்ரவ்ருதே ।**
**ஸு நயனவிப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமர ப்ரமராதிபதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்தினிரம்யகபர்தினி சைலஸுதே ॥ 10 ॥**

*நல்மனம் படைத்த தேவர்களின் அழகிய சோலையில் மலர்ந்த பாரிஜாத மலர்களைப் போல் ப்ரகாசிப்பவளே பாற்கடலில் பிறந்து இரவில் ஒளிரக்கூடிய நிலவை ஒத்த முகம் உடையவளே, பார்ப்பவர் வியந்து நிற்கும் வண்ணம் சுழல்கின்ற அழகிய விழிகளைப் பெற்றவளே மஹிஷாஸுரனை அழித்தவளே அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன்.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

एकत्वमैदैक पारमार्थिकम् दर्शयति ।

**ஏகத்வமேவைக பாரமார்திகம் தர்சயதி**

*எல்லா உயிர்களிலும் ஒரே ஆத்மாதான் என்பதை பரமார்திகம் காண்பிக்கிறது. அத்யந்தமிதம் ப்ரமாணம் ஆத்மைகத்வஸ்ய ப்ரதிபாதகம்.*

अत्यन्तमिदम् प्रमाणम् आत्मैकत्वस्य प्रतिपादकम्

*ஆத்ம ஏகத்வத்திற்கு இதுவே இறுதி ப்ரமாணம்.*

कूटस्थब्रह्मात्मैकत्व विग्यानादेव हि पलम् दर्शयति शास्त्रम् ।

**கூடஸ்தப்ரம்மாத்மைகத்வ விக்யானாதேவ ஹி பலம் (தர்சயதி சாஸ்த்ரம்).**

*ஜீவப்ரம்ம ஐக்யத்தை பலன் என்று சாஸ்த்ரம் சொல்லும்.*

परमारथ्वस्थायाम् सर्वव्यवहार अभावम् वदन्ति वेदान्तास्सर्वे ।

**பரமார்தவஸ்தாயாம் ஸர்வவ்யவஹார பாவம் வதந்தி வேதாந்தாஸர்வே.**

*உன்னத அனுபவத்தில் எல்லா வ்யவஹாரங்களும் இல்லாது போகும்.*

परमारथतु न जीवो नामबुह्म्ध्द्युपाधि सम्बन्दोपरि कल्पितस्वरूप व्यतिरेकेणास्ति ।

**பரமார்தஸ்து ந ஜீவோ நாம புத்த்யுபாதி ஸம்பந்தோபரி கல்பிதஸ்வரூப வ்யதிரேகேணாஸ்தி**

*உபாதியில் உள்ள ஜீவன் பேருண்மையில் இருக்காது. கல்பிதமான ஜீவபாவத்தை தள்ளினால்தான் விளங்கும்.*

सम्सारिणस्सम्सारित्वापोहेनेश्वरात्मतत्वम् प्रतिपादयिषितम् ब्रह्मसूत्र भाष्यम्

**ஸம்ஸாரிண ஸம்ஸாரித்வ அபோஹேன ஈஸ்வர ஆத்மதத்வம் ப்ரதிபாதயிஷிதம்**

*போக்கும் வரவும் உள்ள ஜீவதத்வத்தைத் தள்ளினால்தான் ஈஸ்வரதத்வம் ப்ரகாசிக்கும்.*

भोग्यभोक्त्रदिप्रपन्चजातस्य ब्रह्मयतिरेकेणाभावः ।। (ब्रह्मसूत्रभाष्यम्)

**போக்யபோக்த்ராதி ப்ரபன்ச ஜாதஸ்ய ப்ரம்ம வ்யதிரேகேண அபாவ:**

*ப்ரம்மதத்வத்தில் போக்ய போக்துருதத்வம் இல்லாமல் போகும்.*

देहाद्द्यात्मप्रत्ययतिरस्करेण अक्षरैकात्मतवम् फलम् आपादयेत् (मुण्दकभाष्यम्)

**தேஹாதி ஆத்மப்ரத்யய திரஸ்காரேண அக்ஷர ஏகாத்ம தத்வம் பலம் ஆபாதயேத்.**

*அனாத்மதத்வமான உடல் மனம் இவைகள் மறையஏகாக்ஷர ஆத்மதத்வம் புலப்படும்.*

तस्य सर्वात्मत्वादेव सर्वावाप्तिलक्षणम् फलम् (मुण्दक भाष्यम्)

**தஸ்ய ஸர்வாத்மத்வாதேவ ஸர்வ அவாப்திலக்ஷணம் பலம்.**

*ஆத்மனே எல்லா உயிர்களிலும் இருப்பதை உணர்வது எல்லாம் அறிந்ததாகும்.*

आत्मन एवेदम् सर्वम् आत्मैव च सर्वम् ।। (ईशा भाष्यम्)

**ஆத்மன ஏவேதம் ஸர்வம் ஆத்மைவ ஸர்வம்**

*எல்லாம் ஆத்மாவைச் சார்ந்தவை. ஆத்மாவே எல்லாம்.*

सर्वात्मभाव एव सर्वैष्णासन्यासग्यान निष्टा फलम् (ईशा भाष्यम्)

**ஸர்மாத்வ பாவ ஏவ ஸர்வ ஏஷணா ஸம்யாஸஞ்யான நிஷ்டா பலம்**

*ஆசா நிகளம் தூளாயினபின் எல்லா உயிர்களும் ஒரே ஆத்மா எனும் ஞ்யானம் உதிக்கும்.*

सर्वस्य हि वेदितुः स्वात्मा ब्रह्मेति सर्ववेदान्तानाम् सुनिश्चयो अर्थः (केणोपनिषद् भाष्यम्)

**ஸர்வஸ்ய ஹி வேதிது: ஸ்வாத்மா ப்ரம்மேதி ஸர்வ வேதாந்தானாம் ஸுனிச்சயோ அர்த:**

*எல்லாராலும் அறியப்படும் இந்த ஆத்மா ப்ரம்மமே என்பது வேதாந்தத்தின் நிச்சயக் கோட்பாடு.*

(தொடரும்)

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

*பருப்பொருள்களின் இயல்பு*

**ஜீவனும் அத்யாரோபமும் சார்வாகர்களின் கொள்கை**

**இதானீம் ப்ரத்யகாத்மனி இதமிதம் அயமாரோபயதீதி விஸேஷத உச்யதே 122**

*இப்போது எப்படி மக்கள் பரமாத்மாவில் இது நான் இது நான் என்று ஆரோபிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.*

**அதிப்ராக்ருதாஸ்து ''ஆத்மா வை ஜாயதே புத்ர:''இத்யாதி ஸ்ருதே:**

**ஸ்வஸ்மின்னிவ புத்ரேபி ப்ரேமதர்சனாத்புத்ரே புஷ்டே நஷ்டே சாஹமேவ**

**புஷ்டோ நஷ்டஸ்சேத்யாத்யனுபவாச்ச புத்ர ஆத்மேதி வததி । 123**

*மிகவும் பாமரன் சொல்வான். ஸ்ருதியும் ஆத்மாதான் புத்ரனாகப் பிறக்கிறது என்பதை வைத்துக்கொண்டு தன் பிள்ளை விஷயத்திலும் அவன் மகிழ தானும் மகிழ்வான் அவன் தாழ தானும் வீழ்வான்.*

**சார்வாகஸ்து ''ஸ வா ஏஷ புருஷோ அன்னரஸமய:''இத்யாதி ஸ்ருதே:**

**ப்ரதீப்தக்ருஹாத் ஸ்வபுத்ரம்பரித்யஜ்யாபி ஸ்வஸ்ய நிர்கர்பதர்சனாத்**

**ஸ்தூலோஹம் க்ருசோஹம்**

**இத்யாதி அனுபவாச்ச ஸ்தூலசரீரம் ஆத்மேதி வததி ॥ 124**

*சார்வாகன் கொள்கை இந்த புருஷன் அன்ன ரஸமயமானவன் என்னும் வேதவாக்யத்தை அடிப்படையாக எடுத்துக் கொண்டு எரியும் வீட்டிலிருந்து பிள்ளையைக்கூட விட்டுவிட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுவான் மனிதன். அவனே நாம் பருத்தவன், நான் இளைத்தவன் என்று இந்த ஆத்மா சரீரம்தான் என்பான்.*

**அபர சார்வாகஸ்து ''தே ஹ ப்ராணா: ப்ரஜாபதிம் பிதரமேத்யோசு:'' இத்யாதி ஸ்ருதே: இந்த்ரியாணாமபாவே சரீரசலனாபாவாத் காணோ அஹம் பதிரோஹம் இத்யாதி அனுபவாச்ச இந்த்ரியாணி ஆத்மேதி வததி ॥ 125**

*இன்னொரு சார்வாகன் சொல்வான் இந்த ப்ரானன்கள் பிதாவான ப்ரஜாபதியிடம் சொல்லின. இந்த வேத வாக்யத்தைக் கொண்டு இந்த்ரியங்கள் தான் ஆத்மா என்பர். இந்த்ரியங்கள் சலிப்பு இல்லாத போது தேஹமும் சலிக்காது, மேலும் நான் குருடன், நான் செவிடு என்றும் கூறுகிறோம்.*

**அபர்சார்வாக:''அன்யோந்த்ர ஆத்மா ப்ராணமய:''இத்யாதி ஸ்ருதே: ப்ராண அபாவ இந்த்ரியாதிசலன அயோகாத் அஹம் அசனாயாவான், பிபாஸாவான் இத்யாதி அனுபவாச்ச ப்ராண ஆத்மேதி வததி ॥ 126**

*இன்னொரு சார்வாகன் சொல்வான் ப்ராணமயனே ஆத்மா எனும் வாக்யத்தைக் கொண்டு, ப்ராணன் இருந்தால்தான் இந்த்ரியம் சலிக்கும், மேலும் நான் பசியாயிருக்கிறேன், நான் தாகமாயிருக்கிறேன் என்று சொல்வதாலும் ப்ராணனே ஆத்மா.*

**அன்யஸ்து சார்வாக: ''அன்யோந்த்ர ஆத்மா மனோமய: இத்யாதி ஸ்ருதே: மனஸி ஸுப்தே ப்ராணாதேரபாவாதஹம் ஸங்கல்பவானஹம் விகல்பவானித்யாதி அனுபவாச்ச மன ஆத்மேதி வததி ॥ 127**

*இன்னொரு சார்வாகன் சொல்வான் இந்த ஆத்மா மனோமயன் என்னும் வேதவாக்யத்தைக் கொண்டு மனம் ஒடுங்க எல்லாம் ஒடுங்கும், மேலும் நான் ஸங்கல்பிக்கிறேன் நான் ஊகிக்கிறேன் என்பதெல்லாம் மனத்தினால் தான் என்பான்.*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

**பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா**



*யுதிஷ்டிரர் க்ருஷ்ணனே உன்னாலன்றோ உலகம் என்குடைக்கீழ் உள்ளது. தேவையான ஸம்பத் ஸம்பாதிக்கப்பட்டது. மிகச்சிறந்த வேள்வியை செய்ய அனுமதி கொடு.*

*க்ருஷ்ணர் உனக்கு எது விருப்பமோ அதைச் செய். எனக்கும் ஒரு வேலையை கொடு, உன் கட்டளைப்படி செய்வேன். க்ருஷ்ணரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தர்மர் தன் தம்பிகளையும் தனக்கு வேண்டியவர்களையும் வர வழைத்தார்.*

*தன் தம்பிகள், பரிவாரம் சூழ யஞ்யசாலைக்குள் தர்மத்தின் இன்னொரு உரு போல் தர்மர் நுழைந்தார். இந்த வேள்வியில் க்ருஷ்ணர் ஒருவர்தான் அக்ர பூஜைக்கு ஏற்றவர் என்று பீஷ்ம பிதாமஹர் தீர்மானித்தார். பீஷ்மர் ''தன்னுடைய பராக்ரமத்தாலும் தேஜஸாலும் மனிதர்கள் மத்தியில் ஸூர்யன் போல் க்ருஷ்ணரே ப்ரகாசிக்கிறார். அவருக்கே அக்ரபூஜை.''*

*ஸஹதேவன் இதைக்கேட்டு அவருக்கு வேண்டிய சிறந்த பொருள்களை பீஷ்மரிடம் அனுமதி வாங்கி அவரை பூஜித்தான்.*

### சிசுபால வதம்

*சிசுபாலன் க்ருஷ்ணருக்குச் செய்த பூஜையை விரும்பவில்லை. சிசுபாலன் '' யுதிஷ்டிரனே நீ சரியாகப் பார்க்கிறாயா/ அல்லது பார்க்கவேயில்லையா?மற்ற பெரியோர்கள் இருக்கும்போது ஓர் இடையனை பூஜிக்கிறாய். ஹே க்ருஷ்ணனே உனக்குத் தெரியவேண்டாமா? உனக்குத் தகுதியில்லாத கௌரவத்தை அடைய விரும்புவது ந்யாயமா? க்ருஷ்ணனே உனக்கு என் சவால். என்னோடு யுத்தத்துக்கு வா, உன்னையும் பாண்டவர்களையும் அழிக்கிறேன்''.*

இப்படி சொல்லிய சிசுபாலன் யுத்தத்துக்கு ஸன்னத்தமானான். சக்ர கதாபாணியான க்ருஷ்ணர் தத்க்ஷணமே சிசுபாலனின் சிரத்தைத் துண்டித்தார். அவனிடமிருந்து ஒரு ஜோதி கிளம்பி அவரை அடைந்தது. க்ருஷ்ணரின் ஆசீர்வாதத்தால் தர்மரின் யாகம் வெற்றியுடன் முடிந்தது. அவப்ருதஸ்னானம் முடித்த தர்மரிடம் அரசர்கள் வணங்கி கூறினர். ''உங்கள் வளர்ச்சிக்கு நாங்கள் அடிபணிகிறோம். இவ்வுலகின் ஸாம்ராட்டாக இருக்கிறீர். இந்த யாகத்தால் மிகப்பெரிய தர்மத்தைச் செய்துள்ளீர். எமது வாழ்த்துகள். எமக்கு விடை தாருங்கள்.'' பாண்டவர்கள் ஒவ்வொருவரையும் தனிதனியாக வழியனுப்பி வைக்க க்ருஷ்ணரும் த்வாரகைக்குப் போனார்.

## துர்யோதனனின் மனக்குமுறல்

இப்படி எல்லா அரசர்களும் விடைபெற துர்யோதனனும் தர்மரிடம் விடை பெற்றுக் கொண்டபின் மனம் குமைந்து ஹஸ்தினாபுரம் வந்தான். பாண்டவர்களின் மகிழ்ச்சியைப் பொறுக்காத துர்யோதனன் ஆத்திரத்துடன் த்ருத்ராஷ்ட்ரனிடம் கூறினான் .

''அரசே தர்மனின் வளர்ச்சி எனக்குப் பொறுக்கவில்லை, சாந்தி எனக்கில்லை, நான் உண்ணும் உணவு செரிக்கவில்லை என் மனம் எரிகிறது.''

## சகுனியின் வஞ்சக ஏற்பாடு

''ஹே வீரனே தர்மனின் வளமனைத்தும் உனக்கு வர எனக்கு ஓர் யோசனை உண்டு. சூதாட்டத்தில் என்னை மிஞ்ச யாருமில்லை. அதன் நுணுக்கம் நானறிவேன். தர்மனுக்கு சூதாட்டம் ஆட விருப்பமதிகம். ஆனால் ஆடத்தெரியாது. நான் சூதாடி வஞ்சகமாய் அவனைத் தோற்கடிப்பேன். அவன் வளமெல்லாம் உனதாக்குவேன். அவனை சூதாட அழைத்து வா''என்றான்.

(தொடரும்)

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

***வினா :*** *- அத்வைதக் கருத்தையே வேதாந்தம் என்னும் சொல்லால் பூர்வாசாரியர்கள் வழங்கியிருக்கிறார்களா?*

***விடை :*** *- வழங்கியுள்ளார்கள். "அத்வைத சித்தி" என்னும் பெரு நூலியற்றிய மாசூதன ஸரஸ்வதி என்னும் மஹான் அத்வைத சித்தாந்தத்தை ஒரு அம்ருத பிந்துவில் அடக்கிக் காட்டும் வகையில் "சித்தாந்த பிந்து" என்னும் உயரிய நூலை உலகத்திற்கருளினார்கள். மற்றுமொரு முக்கியமான அத்வைத நூல் சர்வ வேதாந்த சித்தாந்த சார சங்கிரஹம். இன்னொரு முக்கியமான நூல் "சித்தாந்த சித்தாஞ்ஜனம்" என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. அத்வைத வேதாந்தக் கொள்கைகளையெல்லாம் ஒருங்கே புனைந்த அப்பய தீக்ஷிதருடைய மற்றொரு பெருநூலுக்குச்" சித்தாந்த லேச சங்கிரஹம்" என்ற பெயர் வழங்குகிறது.*

*ஆதலால் அத்வைத சித்தாந்தமே உபநிஷத்துக்களாம் வேதாந்தத்தின் தெளிவு. உபநிஷத்துக்களின் யஜ்ஞகாலங்களில் செய்ய வேண்டிய சில உபாஸனைகளும் தனித்துச் செய்ய வேண்டிய "சூரியனே மது" என்று நினைப்பது போன்ற சில உபாசனைகளும், உருவத்துடனும், குணங்களுடனும் சேர்த்துச் செய்ய ண்டிய சில ஈசுவரோபாஸனங்களும், ஆகமவித்யைக்குத் தகுதியான புத்திரனே பிறக்க வேண்டும் என்பதற்காகச் கிருஹஸ்தர்களுக்காகச் சொல்லப்பட்ட சில கர்மங்களும் இவ்வளவிற்கும் பயனான துரிய அத்வைத சிவாத்ம ஞானமும் கலந்து உபதேசிக்கப்படுகின்றன. இவைகளில் எல்லாவற்றிற்கும் பயனான துரீய அத்வைத சிவாத்ம ஞானத்தைத் தெளிவுபடுத்துவதினாலேயே அத்வைத சித்தாந்த நூல்கள் வேதாந்தத்தின் தெளிவாகின்றன.*

*இந்த சிவாத்ம அத்வைத துரீய நிலை ப்ரணவப் பொருளை அறிவிக்கும் மாண்டூக்ய உபநிஷத்தின் இறுதியில் மிளிர்கின்றது.*

***வினா :*** *- இதுவரை கூறியவற்றால் என்ன தெரிகிறது?*

***விடை :*** *- துயருறும் ஏழைகளாம் மானிட மக்களை கருணையுடன் கைதூக்கிவிடும் ஒரே நோக்கத்துடன் உழைக்கும் எல்லா நூல்களின் ஆசிரியர்களும், முக்தியையடைவதற்கும், படிப்படியாக அமைந்த கருமம், பக்தி, வழிபாடு, யோகம் முதலிய கொள்கைகளில் வெவ்வேறு கருத்துடையவராயினும் அவர்கள்*

அத்வைதத்திலே தான் உள்ளக் கருத்துடையவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

***வினா :*** - "அத்வைதம்" என்பதற்குப் பொருள் என்ன?

***விடை :*** - "அத்வைதம்" என்பது வடசொல் ந த்வைதம் இதன் சமாசம். இங்கு "ந" "அ" என்று மாறிற்று. இதற்கு இன்மை பொருள் த்வைதம் என்றால் வேறுபாடு எனவே "அத்வைதம்" என்ற சொற்கு "வேறுபாடில்லாதது" என்பது பொருள்.

***வினா :*** - அத்வைதம் என்பதற்கு வேறுபாடல்லாதது என்று பொருள் சொன்னால் என்ன?

***விடை :*** - பெரியோர் எல்லோரும் இன்மைப் பொருளையே கொண்டிருக்கின்றனர். சிவஞானபோத ஆசிரியரும், 8 ஆம் சூத்திரத்தில் "அந்நியமின்மையின் அரன்கழல் செலுமே" என்ற இன்மைப் பொருளையே கொண்டிருக்கிறார்.

***வினா :*** - வியாகரணசாஸ்திரம் "ந" கரத்திற்கு என்ன பொருள் கூறுகிறது?

***விடை :*** - "ந" என்பதற்கு அன்மை, இன்மை, உவமை முதலிய ஆறு பொருள்களையும் கூறிய பின்னர், இல் வெல்லாப் பொருளுக்கும் பொதுப் பொருளாக, "நிவிருத்தம்" அல்லது "ஆரோபம்" என்பதைக் கூறியிருக்கிறது. "ஆரோபம்" என்றால் ஓரிடத்தில் இல்லாத பொருள் அங்குத் தோற்றுவது இதைக் கொண்டு "தோற்றம்" அல்லது தோற்றமாம் த்வைதத்தின் விவிருத்தி என்னும் பொருளே ஸம்ஸ்கிருத இலக்கணப்படி அத்வைதமென்னும் சொல்லின் கருத்தாய் முடிகின்றது.

***வினா :*** - இவ்விதப் பொருளை யார் கூறியிருக்கிறார்?

***விடை :*** - மஹாபாஷ்யமியற்றிய "பதஞ்சலி முனிவர்"

***வினா :*** - ஒருவன் த்வைதக் கொள்கையைக் கொண்டால் என்ன?

***விடை :*** - த்வைதம் வேத சம்மதமன்று

***வினா :*** - வேதத்திலே த்வைதத்தை (வேறுபாட்டை)த் தெரிவிக்கும் வாக்கியங்களை காணப்படுகின்றனவே, அவற்றிற்கு என்ன பயன்?

***விடை :*** - முடிவான அத்வைதத்தைப் போதிப்பதே அவற்றின் பயன்.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

**பாகம்-2**

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*23.மூங்கில் பெட்டியால் பின்னப்பட்ட உரியடிப் பெட்டியும் வழுக்குமரத்தில் பூசப்பட்டிருக்கும் பசை முதலியனவயும் அக்ஞானமாகும். பலவிதமான இடையூறுகளுக்கிடையில் தடிகளால் உரியை அடித்தும், கைளால் பிடித்து பெட்டினய உடைப்பதும், வழுக்கு மரத்தின் மீது பூசப்பட்ட அக்ஞானமாகிற பாசபந்தங்களைக் களைந்தும் படிப்படியாக மேலே ஏறுவதும், சிரவணம் முதலிய ஸாதனங்களால் உண்டாகிற அறிவாகும். வழுக்குமரத்தின் அடியில் ஸ்திரமாக நின்று மேலே ஏறிச் செல்பவர்களுக்கு உதவுபவர்கள் ஆரூடயோகிக்கும், மேலே ஏறிச் செல்பவர்கள் ஆருருக்ஷுவிற்கும் ஸமமானவர்களே, இத்தத்துவமே உரியடித் தத்துவம். உரியிலும், வழுக்குமரத்தின் மேலும் தொங்கும் ப்ரஸாதத்தை பகவத்ப்ரஸாதமாக ஏற்று, பக்தர்கள் பகிர்ந்து கொள்வது, பகவத் அனுக்ரஹத்தினாலேயே பரப்ரஹ்ம ஞானம் கிட்டி பூர்ணனந்தம் கிட்டும் என்பதைக் காட்டுகிறது.*

*24. 2 வது தரங்கம், சூர்ணிகை 17ல் ஸ்ரீ தீர்த்தர் ''முக்யப்ராண இவ வாகாதீன்'' என்ற சொற்றொடரை உபயோகித்து ஸ்ரீ கிருஷ்ணனை ப்ராணனுக்கு இணையாகவும் கோபர்களை வாக்கு முதலிய புலன்களுக்கு இணையாகவும் உருவகப்படுத்தி, வாக்கு முதலிய புலன்களைக் காட்டிலும் ப்ராணனே சிறந்தது என்று விளக்குகிறார். ப்ராணனே ஐம்புலன்களிலும் சிறந்தது என்ற விஷயமானது, ப்ரச்னோபநிஷத் 2வது ப்ரசனம் 4வது வாக்யத்திலும், சாந்தோக்ய உபநிஷத் 5வது அத்யாயம் 1வது கண்டத்திலும், ப்ரஹதாரண்ய உபநிஷத் 6வது அத்யாயம் 1வது கண்டத்திலும் கூறப்படுள்ளது. எனவே ஸாஸ்த்திரங்கனளயும், வோதாந்தங்களையும் நன்கு கற்றறிந்த ஸ்ரீ தீர்த்தர், பாமர மக்களுக்கும் எளிதாக புரியக்கூடிய வகையில் ஸகல வேதாந்த ஸாரங்களைத் தன் நூலில் இடைஇடையே நன்மணிகளாகக் கோர்த்திருக்கிறார்.*

*25. ஸ்ரீ தீர்த்தர், ''பாஹி பாஹி ஜகன் மோஹன கிருஷ்ண பரமானந்த ஸ்ரீ கிருஷ்ண'' (4வது தரங்கம்- கீதம் 35) என்று குழந்தை ஸ்ரீ கிருஷ்ணனின் அழகு உலகம் அனைத்தையும் மயங்க வைக்கும் அழகு என்றும் பரமானந்த வடிவுடையவன் என்றும் கூறுகிறார். சாதாரணமாக ஒரு குழந்தையின் கள்ளம் கபடற்ற சிரிப்பைப் பார்த்தாலே நமக்கு இனம் தெரியாத ஆனந்தம் கிட்டுகிறது. ஏனென்றால் அது பூர்ண ஸத்வ குணத்துடன் இருப்பதாலேயே அதற்கு அன்னப்ராசனம் ஆகும்வரை இந்த பூர்ண ஸத்வ குணம் அவனிடம் நீடிக்கிறது. அதற்குப் பின் அதற்கு ரஜோ, தமோ குணங்களின் கலப்பு*

வந்துவிடுகிறது. ஸத்வ குண அளவும் குறைய ஆரம்பிக்கிறது. அப்படியிருக்க ஸுத்த சத்வ குணமே உருவெடுத்து இருக்கும் குழந்தை ஸ்ரீ கிருஷ்ணனைக் காணும் போது பரமானந்தமாக இல்லாமல் எப்படி இருக்க முடியும். அதையே ''பரமானந்த ஸ்ரீ கிருஷ்ணா'' என்கிறார்,

26. மேலும் (4வது தரங்கம்- கீதம் 35) 3வது சரணத்தில் ஸுலபமாக மாந்தர்களால் அறிய முடியாத உள்ளடங்கிய மஹிமை வாய்ந்தவர் என்பதை கூட ''மஹிம ஸ்ரீ கிருஷ்ணா'' என்கிறார். நந்த கோகுலத்தில், குழந்தை ஸ்ரீ கிருஷ்ணன் செய்யாத சாஹசங்கள் இல்லை. பூதனை வதம், சகடாஸுர வதம், காளிங்க நர்தனம், கோவர்தனகிரி உத்தாரணம் போன்ற வளர்ந்த மனிதனாலேயே முடியாத பல அதிசயிக்கும் சாஹசங்களைச் செய்தாலும், கோபர்கள் அவனுடைய பராக்கிரமத்தை அறியவில்லை. ஒரு குளத்தில் இருக்கும் மீன்கள் தண்ணீரில் தெரியும் பூர்ண சந்திர ப்ரதிபிம்பத்தைக் கண்டு அதன் பெருமையை அறியாமல், அந்த சந்திரனனயும் தன்னைப் போல் ஒரு மீன் என்று எண்ணுமாம். அது போல கோபர்களும் ஸ்ரீ கிருஷ்ணனை தங்களைப் போல ஒரு சாதாரண இடையன் என்றே எண்ணினார்கள், என்று இதைப்பற்றி ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. இந்தப் பாடலை ஸ்ரீஜேஸுதாஸ் அவர்கள், தன்னுனடய இனிமையான குரலில், அர்த்த பாவத்துடன் பாடும் போது மயங்காதவர் உண்டோ. கல்லும் கரைந்து உருகுமே.

27. அத்வைத வேதாந்த ஸித்தாந்தப்படி ஆத்மஸ்வரூபம் ஒன்றே ப்ரகாசமாக இருக்கும் பொருள். அந்த ஆத்ம ஸ்வரூபத்தை தவிர்த்த அனைத்துப் ப்ரபஞ்சமே, ப்ரகாசம் அற்ற ஜடப் பொருளாகும். எனவே, ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஆவரணம் (மறைப்பு) தேவையில்லை. மாயையின் வசத்தில் கட்டுப்பட்டு கோபிகள் இருந்தாலும், அவர்கள் தன்னிடம் கொண்ட அத்யந்த ப்ரேமையால் கவரப்பட்டு அவர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டு, ஸ்ரீ கிருஷ்ணன் நடத்திய லீலையே கோபிகா வஸ்த்ராபஹரணம். வஸ்திரம், ஸ்தூல தேஹத்தை மறைக்கும் ஆவரணம் (திரை) மாயை, சூக்ஷ்ம தேகத்தையும் காரண தேகத்தையும் மறைக்கும் ஆவரணம் அபஹரணம் என்றால் பரிப்பது, களையும்படி செய்வது என்று பொருள். காத்யாயணி வ்ரதம் மேற்கொண்ட கோபிகைகளின் ஸ்தூலதேஹ ஆவரணம் இந்த லீலையால் நீங்குகிறது. உண்மையான ஆத்ம ஸ்வரூபம் ஸ்ரீ கிருஷ்ணனிடம் கோபிகைகளிடமும் ஒன்றே. கோபிகைகளுக்கு ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூபமான தன்னிடம், மனம், சித்தம் (சூக்ஷ்ம தேஹம்), மாயையாகிற ஆவரணம் களையப்பட்டு தன்னிடம் பூர்ணமாக லயிக்கப்பெற வேண்டும் என்று வஸ்த்ராபஹரணம் என்ற வ்யாஜத்தால் உபதேசித்த போது கோபிகைகளுக்கு மூல அக்ஞான ஆவரணம் போக்கடிக்கப்பட்டது. மேலும், ''என்னிடம் உள்ளத்தை நிலையாக இருக்கச் செய்தவர்களுக்கு மறுபடி உடலையடைந்து சம்ஸாரத்தில் உழலுவது என்பது கிடையாது. தீயில் நன்கு வறுக்கப்பட்ட பயிறு, உளுந்து, கோதுமை போன்ற வித்துக்கள் ஒரு

பொழுதும் வயலில் விதைக்கப் பெற்று முளைத்ததில்லை. ஆகவே, நீங்கள் பிறவியற்றவர்கள் ஆனீர்கள்''- என்று கோபிகைகளிடம் ஸ்ரீ கிருஷ்ணன் கூறினார், (பாகவதம் ஸ்க. 10அத்யா 22-ஸ்லோ. 26). வஸ்த்ராபஹரண தத்துவத்தை, ஸ்ரீ தீர்த்தர் 5வது தரங்கத்தில் ''ஆவரணம் மம நஹி தே தாதும் பாவய கோபவதூஜன ப்ருந்த'' என்ற கீதம் 45ல் கிருஷ்ண கோபிகள் ஸம்பாஷணையின் வாயிலாகத் தெளிவுபடக் கூறியுள்ளார். ஸ்ரீ ரமணரின் அக்ஷர மணிமாலாவில் கூறப்பட்ட வரிகளை இங்கு நினைவு கூர்வோம்

''மானங் கொண்டு உறுபவர் மானத்தையழித்து அபிமான இல்லாது ஒளிர் அருணாசலா''- (அருணாசலர் ஒளிவடிவானவர்- அக்னி தத்வம்)

28. மேலும், ''கோபிகைகள் நான்கு பிரிவாக உள்ளனர், உபநிஷத்துக்கள் தண்டகாவனத்திலுள்ள ரிஷிகள், நித்ய ஸித்த கோலோகத்தைச் சேர்ந்தவர்கள், தேவ ஸ்த்ரீகள் ஆகியவர்களை கோகுலத்தில் கோப ஸ்த்ரீகளாக இருப்பவர்கள். மானிடப் பிறவி உள்ளவர்கள் ஒருவரும் இல்லை ''என்ற ப்ரஹ்ம வைவர்த்த புராண வசனக் கருத்தை ஸ்ரீ தீர்த்தரும் 5வது தரங்கத்தில் ஸ்லோ. 135 ல் ''ச்ருதி சிரோவாக் கோபிகாவல்லப:''என்று கோபிகைகள் வடிவம் எடுத்த உபநிஷத் தேவதைகளுக்கு மிக ப்ரியமானவராக விளங்குபவர் என்று ஸ்ரீ கிருஷ்ணரை வர்ணித்துள்ளார்.

29. கங்கை, கோதாவரி, யமுனை, காவேரி, முதலிய நதிகள் கடலில் கலந்தவுடன் பெயரையும், உருவத்தையும் இழந்து ஒரே கடலின் வடிவத்தை அடைகின்றன, அவ்வண்ணமே முக்தி பெற்றவர்கள் ப்ரஹ்மத்துடன் இரண்டறக் கலந்து தம் சுயத் தன்மையை இழக்கிறார்கள். -என்று முண்டகோபநிஷத்தில் கூறிய கருத்தை ஸ்ரீ தீர்த்தர் 6வது தரங்கத்தில் சூர்ணிகை 24 ல் இங்கு கிருஷ்ண ஸமுத்ரத்தில் கோபிகைகளான நதிகள் கலந்து விட்டன என்று வர்ணிக்கிறார்.

30. கண்ணனின் புல்லாங்குழலிலிருந்து எழுந்த ஒலியானது வெளி விஷயங்களில் ஈடுபாடுடைய கோபிகைகளை கண்ணனிடம் கொண்டு போய்ச் சேர்த்தது, என்று 6வது தரங்கம் ஸ்லோ 142,143 ல் ஸ்ரீ தீர்த்தர் கூறுகிறார். இக் கருத்து பாகவதத்திலும் (ஸ்க.10அத்யா 29-ஸ்லோ. 3-8). காணப்படுவது குறிப்பிடதக்கது. மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகியவைகளிலிருந்து முதலில் விடுபட வேண்டும் என்பது வேதாந்தங்களின் முடிவு.

தமிழ்நாடு பிராமண சங்கம்-ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ் இணைந்து கைலாஷ் யாத்திரையை

# சலுகை கட்டணத்திலும், மாதாந்திர தவணையாகவும்

செலுத்தக் கூடிய வகையில் சேவை மனப்பான்மையுடன் நடத்தும்

# கைலாஷ்-மானஸரோவர்

மற்றும் வைணவ சம்பிரதாயத்துடன் கூடிய **முக்திநாத் திவ்யதேச யாத்ரா-2020**

**20 ஆண்டுகளில் 7300 சிவனடியார்கள் தரிசனம் பெற அழைத்து சென்று சாதனை கொண்ட ஒரே நிறுவனம்**

சிவமே தமிழ் - தமிழே சிவம். மனிதனாகப் பிறந்த நம் அனைவருக்கும் இறைவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் மனதின் அடியிலே இருந்துகொண்டே இருக்கிறது. அந்த இறைவனாகிய எம்பெருமான் சிவனையும் பார்வதி தேவியையும் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கயிலையில் நேரில் தரிசித்து எல்லையில்லாப் பேரின்ப நிலை அடையவும், மேலும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் சிவபூஜைக்குப்பின் திருமுறைகளோடு, கயிலாய வாத்தியங்கள் இசைக்க, சங்க நாதம் ஒலிக்க, தமிழ் வேதங்களுடன், சிவ வாத்திய முழக்கத்தோடு அடியார்கள் ஆனந்த நடனமாட, சகல பரிவாரங்களும் அசைந்து வர, வரலாறு பதிவு செய்யும் விதமாக அடியார்கள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் இந்துக்களின் இறைநெறியான திருவாசகம் முற்றோதலுடன் கூடிய இந்த யாத்திரையின் மூலம் எழுச்சி மிக்க அபரிதமான ஆயுளை நீடிக்கச் செய்யும் சகல சக்திகளும் நிறைந்த பிரபஞ்ச உயிர் சக்தியை நீங்கள் நேரில் பெறவும், மகிமைகொண்ட பிரபஞ்ச தெய்வீக நடனமான (Cosmic Dance) சிவதாண்டவத்தை நேரில் தரிசிக்கவும், மேலும் நமது உடலின் அத்தனை ஆதார சக்கரங்களும் விழித்துக் கொள்ள ஆன்ம சக்தி இறைசக்தியோடு எழுச்சியுடன் இணைவதை நீங்கள் உணரவும் ஓர் அரிய வாய்ப்பு!

ஆன்மீக அதிசய அற்புதங்கள் நிகழ்ந்த, தெய்வங்கள் வாழ்கின்ற திருக்கயிலையில்
**நடையிடுங்கள்!**

மானஸரோவர் புனித நீரில் மூழ்கியெழும் பேறுபெற்று தெய்வீக மர்மங்கள் நிறைந்த அவ்விடத்தில்
**தியானியுங்கள்!!**

கயிலாயத்தின் சூட்சம அதிர்வுகளையும், கயிலாயத்தின் ரகசியங்களையும்
**உணர்ந்திடுங்கள்!!!**

## தாங்கள் கடவுளைக் காணப் போகிறீர்கள்!
## கடவுளோடு கலந்துறவாடப் போகிறீர்கள்!!

| | | | | |
|---|---|---|---|---|
| **மே 07** சித்ரா பௌர்ணமி | **ஜீன் 05** வைகாசி பௌர்ணமி | **ஜீலை 04** ஆனி பௌர்ணமி | **ஆக.03** ஆடி பௌர்ணமி | **செப்.01** சிவ-பார்வதி திருக்கல்யாண சிறப்பு பெருவிழா யாத்திரை |

| | | |
|---|---|---|
| சென்னையிலிருந்து ரயில் மூலம் டெல்லி வழியாக காட்மண்டு அடைந்து, பின்பு அங்கிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 20 நாட்கள் | காட்மண்டுவிலிருந்து தரை வழியாக சூப்பர் டீலக்ஸ் ஏசி வாகனம் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 14 நாட்கள் | சென்னையிலிருந்து விமானத்தில் லக்னோ வழியாக ஹெலிகாப்டர் மூலம் கைலாஷ் யாத்திரை சென்று வர 11 நாட்கள் |

அனைத்தையும் குணமளிக்கும் சக்தி நிறைந்த மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடி தெய்வீக அதிசயங்களை காணவும், கிரிவலம் சென்று கயிலைநாதனை முழுமையாக தரிசிக்கவும், நமக்குள்ளே இருக்கும் பிரபஞ்சம் தூண்டப்படவும், ஆற்றல் மிக்க பாசிடிவ் காஸ்மிக் எனர்ஜி நம்முள் பிரவேசித்து பிரதிபலிப்பதை நிதர்சனமாக உணர்ந்து தெய்வீக பேரின்ப நிலையை அடையவும், யோகா மற்றும் பிராணாயாமம் போன்ற சிறப்பு பயிற்சிகளை முறையாக அளித்து யாத்திரை முழுவதும் நாங்களே உடன் இருந்து தகுந்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்வது இந்தியாவிலேயே யாத்திரையில் 20 வருடம் அனுபவம் கொண்ட நாங்கள் மட்டுமே

**ஸ்ரீராமானுஜரின் 1003வது அவதார ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீராதா கல்யாணம், உபன்யாசம், பாராயணத்துடன் கூடிய**


# நேபாள்-ஸ்ரீசாளகிராம முக்திநாத் திவ்யதேச யாத்ரா

ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு புறப்படும் | ரயில் மூலம் 12 நாட்கள் விமானம் மூலம் 6 நாட்கள்

சீனா, திபெத், நேபாள் டூரிஸம் போர்டில் பெர்மிட் மற்றும் விசாவை நேரடியாக பெறுவதால் குறைந்த கட்டணத்தில் ரயில் மூலம் சென்னையிலிருந்து காட்மண்டு வரை தொடர்ந்து அழைத்துச் செல்வது நாங்கள் மட்டுமே!

*ஞான ஒளி வீசும் சிவனின் வாசஸ்தலத்தை தரிசிப்பதன் மூலம் காணக்கிடைக்காத பல அற்புதங்களை தாங்கள் காணப் போகிறீர்கள். தங்களின் உள்ளத்தையும், உணர்வுகளையும் உயர்த்தி மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயரப் போகிறீர்கள். நூறு பிறவியின் பெரும்பயனை அடையப் போகிறீர்கள்*

**கயிலை தரிசனம் நம் வாழ்வை நீடிக்கும் ஆற்றல் கொண்ட அதிர்வலைகளைக் கொண்டது**



GET ₹ 40,000 FOR KAILASH
GET ₹ 10,000 FOR MUKTHINATH
SUBSIDY FROM TAMILNADU GOVT.

#1 yatra

தெய்வீக புதிராக நிற்கும் கயிலை மலையானை தொட்டு ஸ்பரிசித்து மெய்சிலிர்க்க வைக்கும் பேரின்நிலை, யோகநிலை அடைய தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

# ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்®

sapyservice@gmail.com | www.annapooraniyatra.com

**63, NADU STREET, MYLAPORE, CHENNAI-4 ✆ 8056 333 333, 8056 444 444**

யாத்திரை பதிவு கட்டணம் ரூ. 5,000 மட்டுமே. மேலும் கைலாஷ்-மானஸரோவர், முக்திநாத் யாத்திரை கட்டணம் மற்ற நிறுவனங்களை விட ரூ. 10,000 குறைவே.

**SPECIAL CARE FOR SENIOR CITIZENS**
**PASSPORT WILL BE ARRANGED**

சீன, திபெத், நேபாள அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**தெய்வ உலகம் திருக்கயிலையில்** இறைவனை நீங்கள் **பார்க்கலாம்!** இறைவன் பேசுவதை நீங்கள் **கேட்கலாம்!** இறைவனோடு நீங்கள் **பேசலாம்!** இறைவன் நடத்தும் அற்புதங்களை நீங்கள் **உணரலாம்!**

**யாத்திரையில் கலந்துகொள்ளும் அனைத்து அடியார்களையும் கிரிவலம் அழைத்துச் செல்வதே எங்களின் முக்கிய நோக்கமாகும்**

# ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள்

ரா ஸ்ரீ

**18. கேள்வி : ப்ராம்மணம் எத்தனை?**

**பதில் :** ஐதரேய கௌஷீதகீ ப்ராம்மணம், ருக்வேதம், தைத்ரீய சதபத ப்ராம்மணம் யஜுர்வேதம், ஸாமவிதானம், தாட்யமஹா ப்ராம்மணம், ஸாமவேதம், கோபத ப்ராம்மணம், அதர்வ வேதம்.

**19. கேள்வி : ஆரண்யகம் என்றால் என்ன?**

பதில் : கானகத்தில் சொல்லப்பட்டதாலும், கேட்கப்பட்டதாலும் ஆரண்யகம் என்பர். வானப்ரஸ்த நிலைக்கு ஏற்றார்போல் கதைகள் வ்ரதங்கள் இருப்பதால் ப்ராம்மண பாகமாக இருப்பதாலும் வேதமாகவே கருதுவர்.

**20. கேள்வி : ஆரண்யகம் எத்தனை ?**

பதில் : ஐத்ரேய, கௌஷீதகீ, தைத்ரீயம்

**21. கேள்வி : உபனிஷத் என்றால் என்ன?**

பதில் : ப்ரம்ம, ஆத்ம விசாரம் எதில் உள்ளதோ அது உபநிஷத் எனப்படும். ஆரண்யகத்தின் நீட்சியே வேதங்களின் இறுதி பாகம்.

22. **கேள்வி : உப நிஷதங்கள் எத்தனை?**

பதில் : 108 உப நிஷதங்கள் உள்ளன. அவைகளில் தசபத்து உபனிஷதங்கள் சிறப்பு வாய்ந்தவை. அவை ஈச, கேன, கட, ஐதரேய, தைத்ரீய, முண்டக, மாண்டூக்ய, ப்ரஸ்ன, ப்ரஹதாரண்யக, சாந்தோக்யம்.

23. **கேள்வி : கல்பஸூத்ரம் என்றால் என்ன?**

பதில் : வைதிக வேள்விகள், ஸம்ஸ்காரம் செய்வதற்கான விதிகள், ப்ரயோகங்கள் சொல்லப்பட்டுள்ளதோ அது கல்பஸூத்ரம் எனப்படும்.

24. **கேள்வி : கல்பஸூத்ரம் எத்தனை வகை?**

பதில் : நான்கு வகை 1. ஸ்ரௌத ஸூத்ரம், 2. க்ருஹ்ய ஸூத்ரம், 3. தர்ம ஸூத்ரம், 4. சுல்ப ஸூத்ரம்.

25. **கேள்வி : ஸ்ரௌதஸூத்ரம் என்றால் என்ன?**

பதில் : எவற்றில் யாகம் வேதத்தினை படித்தல், சொல்லிக் கொடுத்தல் ஆகியவை விளக்கப்பட்டுள்ளதோ அதை ஸ்ரௌத ஸூத்ரம் என்பர். ஒவ்வொரு வேத சாகைக்குத் தனி ஸூத்ரம் உண்டு. ஆஸ்வலாயன, காத்யாயன போன்றவை.

26. **கேள்வி : க்ருஹ்ய ஸூத்ரம் என்றாலென்ன?**

பதில் : என்னூலில் பிறப்பிலிருந்து இறப்புவரை உள்ள 40 ஸம்ஸ்காரங்கள் விளக்கப்பட்டுள்ளனவோ அது க்ருஹ்ய ஸூத்ரம் எனப்படும். இது வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளை விவரிப்பதால் க்ருஹ்ய ஸூத்ரம் எனப்படும்.

27. **கேள்வி : தர்ம ஸூத்ரம் என்பது என்ன?**

பதில் : என்னூலில் மனித ஸமுதாயம் காலையிலிருந்து இரவு படுக்கப்போகும் வரையில் மேற்கொள்ள வேண்டிய விதிகளைப் பற்றி விளக்கப்பட்டுள்ளதோ அது தர்மஸூத்ரம் எனப்படும். கௌதம, மானவம் முதலியவை.

(தொடரும்)

## பிதா - குரு

*’மாதா -பிதா - குரு - தெய்வம்’ என்பது எல்லோருக்கும் தெரிந்த பொது வசனம். இதில் மாதா-பிதா இண்டு பேருமே குருவின் கார்யமான நல்வழிப்படுத்தலையும் செய்பவர்கள்தான். ரொம்பக் குழந்தையாக இருக்கும்போது அம்மா பரம ஹிதமாக கொஞ்சம் கொஞ்சம் நல்லதைச் சொல்லிக் கொடுப்பாள். அப்புறம் கொஞ்சம் விவரம் தெரிகிற வயஸிலிருந்து எட்டு வயஸில் உபநயனம் பண்ணி குரு என்றே இருப்பவரிடம் குருகுலவாஸம் பண்ணுவதற்காகக் குழந்தையை ஒப்படைக்கிற வரையில் அப்பா, அம்மாவை விடக் கொஞ்சம் கண்டிப்புக் காட்டி, ’இப்படியிப்படி இருக்கணும், பண்ணணும்’ என்று அநேக நல்ல விஷயங்கள் சொல்லிக் கொடுப்பார். அதனால் அவருக்கே குரு பெயர் ஏற்பட்டிருக்கிறது…*

*’குரு’ என்றால், அட்சரம் அட்சரமாகப் பிரிக்காமல் நேராக ஒரே வார்த்தையாக அர்த்தம் பண்ணும்போது ’பெரியவர்’ என்றே அர்த்தம். அகத்திற்குப் பெரியவர்* head of the family - *அப்பாதானே? அதனால் அவர் குரு.*